சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பால பாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ௵ ஆவணிமீ ௪உ (1942 ஆக்கஸ்ட் 20 வியாழக்கிழமை) [இலக்கம் ௩௭] 37

கண்ணப்பன் கண்ட கண்ணுதற் பெருமான்

பண்டிதர் மு. நவரத்தினம் அவர்கள்

(முற்றொடர்)

இத்தகைய வளம்மிக்க நாட்டிலே மலைப்பக்கத்தே உள்ள உடுப்பூர் என்ற நகர் இவரது உரிமை பூண்ட நகராகும். 'இவர் திருப்பதி யாதென்னில்...உ முதுபதி உடுப்பூராகும்' என்பது பெரியபுராணம். கண்ணப்பன் வரலாற்றில் வேடுவசேரி வருணனை விசேடமுறுகின்றது. வேடுவசேரியை வருணிக்குங்கால் சேக்கிழார் சுவாமிகளும் சிவப்பிரகாச சுவாமிகளும் தன்மை நவிற்சியாக இயற்கையை உள்ளவாறே படம்பிடித்துக் காட்டுகின்றமை நன்கு நோக்கத்தக்கது.

அச்சேரியின் கண் குறவர்கள் வாழ்க்கை நடத்துகின்றனர். வளைந்த செவியையுடைய நாய்கள் ஆரவாரிக்கின்றன. விளாமரத்தின் கொம்பரில் வலைகள் தூங்குகின்றன. பன்றி, புலி, கரடி, மான் முதலாம் வனவிலங்குகளின் தோல்கள் எங்கணும் தென்படுகின்றது. பாறை முன்றிலில் ஐவன நெல் உணக்குகின்றது. வேட்டுவச் சிறுவர்கள் புலிக்குட்டிகளோடும் பன்றிக்கன்றுகளோடும் அளவிலா மகிழ்ச்சி கூர்ந்து ஆடல்புரிகின்றனர். பெண்மான்களோடு காதல் கூர்ந்த எயிற்றியர் இன்புற விளையாடுகின்றனர். வேட்டுவர் கூட்டம் கொல், எறி, குத்து என்று ஆரவாரிக்கின்ற ஓசை வனமெங்கணும் நிறைந்துள்ளது.

"ஆறலைத் துண்ணும் வேடர்
அயற்புலங் கவர்ந்து கொண்ட
வேறுபல்பசுவின மிக்கு விரவுமா
னினங்க ளன்றி
ஏறுடை வானந் தன்னி லிடிக்குர
லெழிலி யோடு
மாறுகொள் முழக்கங் காட்டும்
மதக்கைமா நிரைக ளெங்கும்"

திரைத்தன்ன, மேகத்தைப் போலக் கருநிறங் கொண்டோர் ஆங்குள்ள வெங்கள் வேடர்கள். வன்தொழிலாகிய வேட்டையாடல் அவர்கள் மேற்கொண்ட சிறந்த தொழிலாகும். அன்னார் அச்சமென்பது இன்னதென்றே தெரியா வீரஞ் செறிந்தோர். வனவிலங்குகளின் தோலினையே உடையாகக் கொண்டவர்கள். விறகொடிக்கும் கள்ளினையும் ஊன்புழுக்கலையும் உணவாகக் கொள்ளுபவர்கள். கச் சுழற் பகழியை ஆயுதமாகக் கொண்டோர்.

இது சேக்கிழார் கண்ட வேடுவசேரியாகும். இவர் இருவரைப் போலவே காயனர் புராணத்தும் இவ்வாறே பறையர் சேரியை வருணித்த நயம் கண்டு களித்தற்குரியது. திருத்தக்கதேவர், கம்பர் முதலியோர்க்கும் நன்மை கற்பனைகப் புனைந்துரைத்தலேனும் பூவிட ... இல சேக்கிழார்பெருமான் அவர்களினும் ஒருபடி ஏற்றமானவரான ராம்.

இனி, சிவப்பிரகாச சுவாமிகள் கண்ட வேடுவசேரியையும் கண்டு களிப்பாம். அச்சேரிக்கண் சந்தனமரங்கள் அதிகமாக விளங்குகின்றன. கவரிமானின் கற்றைகளால் சிறந்த கூடு வேயப்பட்டுள்ளன. வேட்டுவப் பெண்கள் முற்றத்திலிருக்கும் வேங்கைமரத்தின் கொம்பில் தொட்டில்கள் கட்டி, தமது குழவிகளைத் தாலாட்டுகின்றனர். அத்தாலாட்டின் செவ்வழிப்பண் கேட்டு மலைப்பக்கத்தில் மயில்கள் உறங்குகின்றன.

"இருமிற செப்பன இன்புய
திறவார் மைந்தர்
விருப்பப் பின்றிசை நிளம்புலி
கறுமால வீரம்
பெருக்கை செம்புரை முகதினை
பிடியினம் பிலைபேல
சுருக்கட் செப்பவரைக் குறத்தி
ரணிகடை கற்கும்''

சிறப்பினையுடையது அச்சேரி (இளம்புலி வேட்டுவ மைந்தரின் பின் திரிந்து விரல் கற்கவும் பிடியினம் குறத்தியர் பின் நிற்கு அணிகடை கற்கவும் ஆகிய பெருமையுடைத்தென்பது கருத்து) முச்சதலைவர் பாவி வேட்டுவப் பெண்கள் விளையாடல் புரிகின்றனர். அப்பெண்கள் சந்தனமரத்தடியில் நின்று தினைகவரும் கிளிகளைக் கடிகின்றனர். அன்னார் ஓசையைக்கேட்ட விச்சாதரர் யாழ்வருடலையும் விட்டு மெய்மறந்திருக்கின்றனர்.

பிற்காலப் புலவர்களின் வருணனையாலும், கற்பனையாலும் மிகச் சிறந்த கன்னல்யாத்த துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகளது வேட்டுவசேரி இயற்கையின் உண்மையைக் கற்பனையோடு கவினுற வருணித்துள்ளமை கண்டு கண்டு களிக்கத்தக்கது.

வேடர்குலத் தலைவனாகிய நாகனென்பவன் தத்தை எனப் பெயரிய மனைவியுடன் இயைந்து இல்வாழ்க்கையை நடத்தினான். வனசாதியன் பெறவேண்டிய பேறுகள் யாவும் பெற்றும் மகப்பேறின்மை மனத்தை மிக வாட்டுதலினாலே மனைவி தத்தையுடன் பின்வருமாறு எண்ணலானான்:- 'கண்ணில்லாத யாக்கையும், சந்திரனில்லாத விசும்பும், கண்போல விளக்கமுறாத அமைச்சரில்லாத அரசியலும், நீர்பால் வண்ணவரியிலா மக்களிலாத வாழ்வுக்கு ஒப்பாகுமன்றோ?

"சேறணைத்த மென் சிறைத் தனி
சொடு நீயபால்
சோறணைத்த கைத தாமரையோடு
செக் குதிர்வாய்
ஊறணைத்த மார்பிற் ஒளிகா
ருத்தி
யேறுமின்ப முன்னதனையே யுடம்
பென விசைப்பார்'.

அன்றே? பொன்புனைந்த மணி பணித்த சிறுச் சிறவாத மழலையாகிய அமுதம் பருகிலாச் செவி பாவையின் செவியெனப்படுமல்லவா? இம்மையின்பம், மறுமையின்பம் ஆகிய இரண்டிற்கும் மகப்பேறு மாறுடைக்கில்லையன்றோ! ஆதலின் நமது குலதெய்வமாகிய முருகவேளுக்கு மகப்பேறு குறித்துப் பெருவிழா எடுப்பேம்' எனக்கூறி, முருகனாலயத்தை செவ்வேள் முருகவேள் முன்றிற் சென்று, பரவுதல் செய்து நாளும் பராய்க்கடன் நேர்ந்தி நின்றான். வேண்டிய சிறப்புகளோடு வேலனுக்கு வெறியாட்டயர்ந்தனாக, வேற்படைக் குரிசில் வேலன் மேற் றோன்றி அவன் குறைவறச் சிறப்புச் செய்திராதலின் பூமியிலுள்ளோர் யாவராலும் புகழ்ந்தேற்ற ஓர் புதல்வனைத் தருவோம் எனப் பகர்ந்தான். அச் சொல்லமுதத்தை இரு செவிகளாலும் ஆரப்பருகிய தத்தையும் நாகனும் அளவிலா உவகையெய்தி அவனுடைய திருவடி மலர்களை வீழ்ந்து புகழ்ந்து நின்றனராக அருட்கடற் புனிதன் மறைந்தனன். பின்னர் நாகன் சுற்றத்தார்களுக்கு வேண்டியசிறப்புகள் செய்து மகிழ் வெய்தினான். அவன் மனைவியின் திருவுளின் அரும்பெறற் கருப்பமெய்தினள். கருப்பக்குறிகள் தோன்றின. இவ்வாறு வயா வெய்திய கனலை மொழித்ததை குறித்தவர் மாசுதுடைத்திடும் பொன்னனைய புதல்வனைப் பெற்றனர். பெறலருஞ்சேய் பிறந்ததனை நாகன் மகிழ்ச்சிக் கடலில் முழுகினன். தந்தை மகிழ்ச்சியே உருவமானான். வேற்படை ஐயனுக்கு நாகன் பெருஞ் சிறப்பாற்றினன், பெண்ணும் ஆணும் பெருமகிழ்வெய்தலால் எங்கும் எண்ணெய் யாட்டணி நிகழ்ந்தது. காணொரு அடிப்பறையெயன்றி அமாது அத்தியும் எவ்விடத்தும் ஆரவாரித்தன. நீராட்டி, பாலூட்டி, திலதமிட்டு, தொட்டிலில் மகவை ஏற்றினள் தத்தை. கருவரை காளமேகத்தை ஏந்திய தெனக் காதற்புதல்வனைத் தோளமீதெடுத்தான் நாகன்.

தொடர்ச்சி 4-ம் பக்கம்

ஸ்ரீமந். உமாபதி சிவாசாரிய சுவாமிகள்

[அகில இலங்கைச் சைவஇளைஞர் மத்தியமகாநாட்டில் ஸ்ரீமான் சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் [illegible], வேலணை நடராச வித்தியாசாலைத் தாபகரும் வேலணைச் "சைவசித்தாந்த சபை"த் தலைவருமாகிய ஸ்ரீமத் சே. கனகசபாபதிப் பிள்ளை உபாத்தியாய அவர்களாற் செய்யப்பட்ட ஸ்ரீமந். உமாபதி சிவாசாரிய சுவாமிகள் சரித்திரப் பிரசங்கச் சுருக்கம்.]

(முற்றொடர்)

திருவருட்பயன்

இது ஆன்மாக்கள் கருவிருட் பக்தரேமித்த திருவருட்பயன் பெறுவதாக உமாபதி சிவாசாரியரால் அருளிச்செய்யப்பட்ட சித்தாந்த ஞானநூல். இதனுள் பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருண்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறிவுநெறி, உயிர்விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்தருணிலை, அணைந்தோர் தன்மையெனப் பத்து அதிகாரங்களையுடையதாய சித்தாந்த நூலாகும்.

வினா வெண்பா

உமாபதி சிவாசாரிய சுவாமிகள் தமது ஞானாசிரியரான மறைஞானசம்பந்தசிவாசாரியரை முன்னிட்டு இவ்வினாவுரையால் பாசம் விடுமவும் திருவருள்சேர்தலைக் கூடவும்மாடிச் செய்தருளியதோர் சித்தாந்தஞான நூலாகும். இதபதின்மூன்றுவெண்பாக்களாலாயது.

போற்றிப் பஃறொடை

பந்தமும் விடும் முழுமுதற் கடவுளினருளால் உயிர்க்கு நிகழு முறையினைப் பூமியில் நல்ல பக்குவரறிகுய்ய உமாபதி சிவாசாரியர் போற்றிப் பஃறொடையில் சாற்றிய சித்தாந்த ஞானநூல். இது,

"போற்றி திருத்தகு தில்லைப்
போற்ற சிவபோகம்
போற்றியவன்மெய்ஞ்ஞானப் புண்
ணிய நூல் போற்றியெங்கள்
வெப்பந்த வாழ்க்கைவிட வேருப்
வந்துணைசெய்த
சம்பந்த மாமுனிபோற் றுன்''

எனும் தனி நிறுதிவெண்பாவில் நூற்பயனும், நூலின் திறனும், ஆசிரியவணக்கமும் கூறியது காணக.

கொடிக்கவி

மாயாமலவிருளினின்றுபாது குளிக்கும் மன்னுயிர் முன்னவனருளாலும் முன்னவன் சொரூபத் தன்னியல்பினருட்ச் சொலனுதற்கரியவின்ப வாருதியிற்றிளைக்கும் தன்மையாக இக்கெழுத்தினருளமாட்சியால் நின்மலவனதிக் கொடியாய் விளக்கக் கொற்றவன்குடி உமாபதி சிவாசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய சித்தாந்த ஞான நூல்.

நெஞ்சுவிடுதூது

இருமருட்பந்தமுமத்தும் மாயோவுபாதியும், மாணவ முப்புறச் சமயவுபாதியும் யோகச்செய்புதறுகிய தருவருளாலும் திருக்கடந்தை மறைஞான சம்பந்ததேசிகர் வெம்பந்தம் நீக்கும் விசாயலரடி நிழற்குறிவே லக்கக் கூடிய எந்தாய். தைபல் வருந்தக் கோசய் செங்கமலப் பூத்திருத்தள நாயகனப் பலகாற்றும்நிறைஞ்சி அவன் பூங்கொன்றை வாங்கிவென்று நெஞ்சைத் தூதுவிடுத்தலைப் பொருளாகக்கொண்டு உமாபதி சிவாசாரியசுவாமிகள் செய்தருளிய சித்தாந்த ஞானநூல்.

உண்மைநெறி விளக்கம்

இது சத்தினி பாதத்தராமர், நாமறிய வேண்டியதாய தத்துவரூபர், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதெரிசனம், சிவயோகம், சிவபோகமாகிய தசகாரியங்களை விளக்கிச் சிவானுபவ இன்பத்திலக்கூடிச்செய்யும் சித்தாந்த ஞானநூல்.

சங்கற்ப நிராகரணம்

இது சிதம்பரத்தில் சொக்கசமய கனகசபையில் சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகமாகிய பஞ்சகிருத்திய நிருத்தத்தை ஆன்மகோடிகள் பக்குவம் சேர்க்கச் செய்தருளும் நடராஜப் பெருமானின் சாப்தம் ஆயிரத்திருநூற்று முப்பத்தைந்தில் ஆனி மாதத்தில் உற்சவத்தினுறும் திருவிழாவிலன்று தேர்மண்டபத்தில் மாயாவாதி, ஐக்கியவாதி, பாடாணவாதி, பேதவாதி, சிவசமவாதி, சங்கிராந்தவாதி, ஈஸ்வர விகாரவாதி, நிமித்த பரிணாமவாதி ஆகிய எண்வகைச் சமயாசிரியர்களும் சுத்தசைவவாதியுடன் ஒருங்கிருந்து தத்தம்சமயக்கொள்கைகளைச் சங்கற்பித்துப் பேசினார்கள். அவ்வச் சமயத்தவர்களின் கொள்கைகள் நிராகரிக்கத் தக்கவைகளென மூவகையளவைகளாலுஞ் சாதித்து இவற்றின் மேலாய சைவக்கொள்கைகளை நிலைநிறுத்தும் கருத்தினையுடையதாய் உமாபதி சிவாசாரியரவர்களால் பாடப்பெற்ற சங்கற்ப நிராகரணமென்னும் பெயரையுடைய சித்தாந்த ஞானநூல்.

இதில் மாயாவாதி, வைதிகசாஸ்திரத்துட்பட்டோன். ஐக்கியவாதி அகப்புறச்சமயத்தோன். மற்றைய மூவரும் அகச்சமயத்தோர். இற

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

சென்னையில் நிலைமை அமைதியாக விருக்கிறது

சென்னை, ஆக, 13—

தென்னூரில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக நால்வர் இறந்தனர். பத்துப்பேர் காயமடைந்தனர். இப்பொழுது இங்கு நிலைமை கட்டுக்கு அடங்கி யிருக்கிறது. சென்னை யிலிருந்து தென்னூர் முதலிய இடங்களுக்குப் புகைரதப் பொலீஸ் அதிகாரிகள் புகைரதத்திற் கொண்டு போகப்படுகிறார்கள். தென்னூர் குண்டூர் முதலிய இடங்களைத் தவிர, மற்ற இடங்களில் நிலைமை அமைதியாக இருக்கிறது. பலவிடங்களில் மாணவர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கின்றனர். சென்னை நகரில் நிலைமை மிகக அமைதியாக விருக்கிறது. ஏராளமான மாணவர்கள் பாடசாலைகளுக்கு வரத் தொடங்கியிருக்கின்றனர். சில இடங்களில் மறியல்கள் நடைபெற்று வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இராமநாதபுரம் டிஸ்திரிக்கில் சட்ட விரோதமாக உப்பு எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. பலவிடங்களில் எவ்வித ஆர்ப்பாட்டங்களுமில்லை.

* * *

ஸ்ரீமதி. விஜயலக்ஷ்மி பண்டிட் கைது

அலஹபாத், ஆக, 14—

பண்டித ஜவஹர்லால் நேருவின் சகோதரியான ஸ்ரீமதி. விஜயலக்ஷ்மி பண்டிட் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

இக்கால இலக்கியப் போக்கு I

சிறுகதை

[நவாலியூர் சோ. நடராஜன்]

தமிழ் இலக்கியம் இப்பொழுது கொஞ்சக்காலமாக ஒரு புதிய போக்கை அடைந்து வருகிறது. பண்டைக்காலத்தில் தமிழை 'இயல்' 'இசை' 'நாடகம்' என மூன்று விதமாய்ப் பிரித்தார்கள். இசை நூல்களும் நாடக நூல்களும் தமிழில் அநேகம் இருந்தனவென்று கூறப்பட்டு வருகின்றது.

ஆனால் உருப்படியாக இவ்வகை நூல்கள் வெகு குறைவே. பழங்காலந்தொட்டு இயற்றமிழ் நூல்கள் ஏராளமாகத் தமிழில் பெருகி வந்திருக்கின்றன. இக்காலத் தமிழ்இலக்கியத்தின் போக்கை அறிவதற்குப் பழங்கால இயற்றமிழின் போக்கு எவ்வாறிருந்ததென அறிவது மிக பயனுடையதே. நமது தமிழ் இலக்கியத்திலுள்ள பழைய நூல்கள் காதல் என்ற அகப்பொருளைப் பற்றியும், போர், அரசு முதலிய புறப்பொருள்களைப் பற்றியும் கூறின. அரசரின் கொடை முதலியவற்றைப் பற்றிப் பாடிப் பரிசும் பாணரும், இக்காலத்துக் குறிச்சொல்லித் திரியும் குறத்தியர் போன்ற 'விறலியரும்' பாடினார்கள். இவற்றைவிட அநேக நீதி நூல்கள் எழுதப்பட்டன. மக்கள் இவ்வுலகத்தில் அடையும் நான்கு பொருட்களாகிய அறமும் பொருளும் இன்பமும் வீடுமென வகுத்து, இவற்றைப்பற்றிப் பல பல நூல்கள் எழுந்தன. திருக்குறள் இவற்றுள்சிறந்ததாகும். இவற்றை விடப் பெரிய காவியங்களாக, கோவலன் சரித்திர மணிமேகலையின் கதை முதலிய கதைகளும் சிவகன் என்ற அரசனின் அற்புதமான கதையைச் சொல்லும் சிவக சிந்தாமணியும் உதயணன் கதையைச் சொல்லும் பெருங்கதை முதலிய நூல்களும் எழுதப்பட்டன. பின்னர் இராமாயணக் கதையை "கல்வியிற் பெரிய" கம்பர் எழுதினர்.

அதற்கு முன்னரே பக்தி மார்க்கம் தமிழ் நாட்டிற் பரவத் தொடங்கி அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்ற தேவார திருவாசக ஆசிரியர்கள் தோன்றினார்கள். கல்லையும் உருக்கும் கனிவான இசைப்பாடல்களைப் பாடினர். வைஷ்ணவ மதத்திலும் சடகோபர், திருமங்கை முதலிய ஆழ்வார்கள் தோன்றிப் பல பக்திப் பாடல்களை இயற்றினர். பின்னர் கந்தபுராணமும் திருவிளையாடற்புராணமும் முதலியனவும் தோன்றின. வில்லிபுத்தூரார் பாரதத்தைத் தமிழில் எழுதினர். புகழேந்தி நளவெண்பாவைச் செய்தார். இதன்பின்னர்ப் பட்ட காலம் தோன்றி இலக்கண நூல்களையும் சைவசமய சம்பந்தமான தத்துவ நூல்களையும் ஸ்தல புராணங்களையும் உண்டாக்கின. பட்டினத்தார், தாயுமானூர், இராமலிங்க சுவாமிகள், மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை போன்றோர் பழைய தேவார முறையான பாடல்களைப் பரவச் செய்தனர். சுருக்கமாகக் கூறுமிடத்துத் தமிழ் இலக்கியம் காதல், போர், அரசு முதலிய விஷயங்களைப் பற்றிக் கூறத் தொடங்கிப், பின்னர் நீதி சமய சம்பந்தமான வகைப்பிரிவில் புகுந்தது. புத்த ஜைன மதத்தினர் வாயிலாகப் பல நல்ல காவியங்கள் தோன்றின. பக்தி ரசமுள்ள பாடல்கள் வந்தன. புராணங்கள் தோன்றின. கம்பனும் புகழேந்தியும் இதிகாசங்களைச் செய்தனர். சமய சாதனங்கள் தலையெடுத்தன. முதலியவும் பக்தி மார்க்கத்தையே தமிழ்நாடு நாடிற்று. இவ்வாறு விசாலத்துடனும் வாழ்க்கையின் அனுபவம் புடனும் ஆரம்பித்த தமிழ் இலக்கியம் கடைசியாகப் பக்தியில் வந்து இறங்கி அதிலேயே லயித்து விட்டது. ஆனால் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ் வசனம் மேலும் மேலும் சிறந்தது. பலவிதமான விஷயங்களைப் பற்றியும் தமிழில் எழுதினார்கள். தமிழ்ப் பத்திரிகைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டு வரவே தமிழ் இலக்கியமும் மேல் நாட்டு முறைகளை அதிகம் பின்பற்றத் தொடங்கி விட்டது. இவ்வாறு

தொடர்ச்சி 3-ம் பக்கம்

தத்துவப்பிரகாசர் காலம்

மு. அருணாசலம், எம் ஏ.

தமிழிலக்கியத்தின் சரித்திரத்தையும் தமிழ்ப் புலவர்களின் சரித்திரத்தையும் கால முறைப்படி அறிதற்குரிய சாதனங்கள் மிகக் குறைவானவை. மேனாடுகளின் இலக்கிய சரித்திரத்தைப் பார்த்தோமானால், புலவர்களுடைய சரித்திரங்கள் யாவும் விளக்கமாகத் தொகுத்து வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். பெரும்புலவர்களைப்பற்றி மட்டுமல்ல, ஒருபாட்டு, இரண்டு பாட்டுக்களே பாடிய புலவர்களைப் பற்றியுங்கூட, அவர்கள் பிறந்த காலமும், இறந்த காலமும், அவர்கள் வாழ்க்கையில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளும் குறித்து வைக்கப்பட்டுள்ளன. இது காரணமாக, அந்நாட்டு இலக்கிய சரித்திரத்தைக் கோவையாக உணர்தல் எளிதாயுள்ளது. தமிழிலே புலவர்களைப்பற்றி இத்தகைய குறிப்புகள் இல்லாமை, இலக்கிய சரித்திர வுணர்ச்சிக்குப் பெரிதும் இடர்ப்பாடு விளைவிக்கிறது.

இக்குறைக்கு ஒரு வகையிற் காரணம் கூறமுடியும். தமிழிலக்கியத்தோடு மேனாட்டு இலக்கியங்களிற் பெரும்பாலானவற்றை ஒப்பு நோக்குங் காலத்து, அவையனைத்தும் மிகமிகச் சமீப காலத்தனவாயிருத்தல் புலப்படுகிறது. சமீபகால நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுமிடத்துக் காலமுறையைப் பொருத்தக் கூறுதல் இயலும், தொன்மையான நிகழ்ச்சிகளுக்கு இந்த முறைப்படி கூறுதல் அத்துணை எளிதன்று. ஆகவே, பழைய வரலாறுகளுக்கே காலங்கூற முடியாத நிலையில, சமீபகால நிகழ்ச்சிகளுக்கும் காலமுறை அவசியமாக வேண்டுவ தில்லை என்றே தமிழ் மக்கள் கருதிவிட்டார்களெனத் தோற்றுகிறது. நூல்களைப் படித்து சுவைத்து அநுபவிப்பதே போதியதாகு மெனக் கருதிவிட்டார்களெனத் தோற்றுகிறது. எனவே, சரித்திர வுணர்ச்சி குன்றிவிட்டது.

தமிழிலக்கியம் என்று பொதுப்படக் கூறுகையில், சமய இலக்கியங்கள் இவ்வுண்மைக்கு விலக்கல்ல. சமயாசாரியர்கள் சிலருடைய காலம், சைவத்திலும் சரி, வைணவத்திலும் சரி, இன்னும் வரையறுத்துக் குறிப்பிட முடியவில்லை.

இவை இங்ஙன மிருந்த போதிலும், சைவசாத்திரங்கள் செய்த பெரியாருடைய காலத்தை அறுதியிட்டுக் கூறுதற்கு அனுகூலமாக இரண்டு முக்கியமான குறிப்புகள் கிடைத்திருக்கின்றன. முதலாவது, கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் செய்த சங்கற்ப நிராகரணம் என்ற நூலின் பாயிரத்துள்ள பின்வரும் வரிகள்.

''வழுஞ் சிருது நடுத்த ஆயிரம்
வாழுதற் சகன் மருவா நிற்ப''

இதனால், சக ஆண்டு ௧௨௩௫-ல் உமாபதி சிவாசாரியர் இந்த நூலைச் செய்தார் என்பது பெறப்படுகிறது. இச்சக ஆண்டு கி. பி. 1313-க்கு நேராகும். சைவசித்தாந்த சந்தானாசாரியர்களாகிய மெய்கண்டார், அருணந்தியார், மறைஞான சம்பந்தர், உமாபதியார் என்னும் நால்வருடைய காலமும் கி. பி. 13-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தி லிருந்து தொடங்கிக் கி. பி. 14-ம் நூற்றாண்டின் தொடக்கத்தோடு முடிகிறது என்று இதனால் ஒருவாறு விளங்குகிறது.

மற்றொரு முக்கியமான குறிப்பு, மேற்சொன்ன உமாபதி சிவாசாரியர் செய்த சிவப்பிரகாசம் என்ற சித்தாந்த சாத்திரத்துக்கு மதுரைச் சிவப்பிரகாசர் என்ற பெரியார்செய்த உரையின்சிறப்புப் பாயிரத்திற் காணப்படுகிறது. அது வருமாறு:

''ஓதுபுகழ்ச் சகாத்த மாயிரத்து
நானூற்
றொருபதின்மேற் செல்கின்ற
காலந்தன்னில்
மாதுபயில் மதுரையில் வாழ்
சிவப்பிரகாசன்
வண்மை பருள் நிகழ்ச்சியினு
ணமையாக
சதமலம் சதவினை சது மாயை
சதயிர்பின் சது சிவம் என்றே
காட்டித்
தீதில் சிவப்பிரகாசச்
செய்யுள் நூலும்
தேர்க் துரையிட்டே யுலகிற்
சிறப்பித் தானே'

இதனால், மதுரைச் சிவப்பிரகாசர் உரை செய்த காலம் சகம் ௧௪௧௦. அதாவது, கி. பி. 1488 என்று தெரிகிறது. இந்தக் குறிப்பு, பல நூல்களின் காலத்தையும் ஆசிரியர்களின் காலத்தையும் ஒருவகையாக அறுதியிட உதவுகிறது. தத்துவப்பிரகாசர் என்பவருடைய காலத்தை மட்டும் இங்குக் கருதலாம்.

இந்தத் தத்துவப் பிரகாசர் என்பவர் சிறந்த சைவசித்தாந்த நூல்களுள் ஒன்றாகிய தத்துவப்பிரகாசம் என்ற நூலைச் செய்தவர். விரித்த நூலாகிய சிவஞான சித்தியார், ஞானமார்க்க மொன்றையே பிரதானமாகப் போதிக்கிறது. இதைச் செய்தவர் 13-ம் நூற்றாண்டிலிருந்த அருணந்தி சிவாசாரியர். தத்துவப்பிரகாசர், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நான்கு நெறிகளையும் தம் நூலில் விரித்துக் கூறுகிறார். மேலே குறிப்பிட்ட மதுரைச் சிவப்பிரகாசர், தமதுரையில் இரண்டிடங்களில் தத்துவப் பிரகாசத்தி லுள்ள செய்யுட்களை (21, 134) எடுத்து உதாரிக்கிறார். அவர் கூறுகிற முறையினாலே, சித்தியாருக்குள்ள பெருமை இந்நூலுக்கு முண்டு என்பது புலப்படுகிறது. இவற்றால், தத்துவப்பிரகாசமானது சிவப்பிரகாசர் சிவப்பிரகாசவுரை செய்த காலமாகிய கி. பி. 1488 க்கு முந்திய தென்றும், அக்காலத்தே அதற்கு மிக்க பெருமை ஏற்பட்டிருந்த தென்றும் உணரலாம். ஆகவே, தத்துவப்பிரகாசர் இந்த ஆண்டுக்கு வெகுகாலம் முன்னதாகவே வாழ்ந்தவராகிறார்.

இனி, இவ்வாசிரியர், தம்நூலின் பாயிரத்துள் இரண்டு செய்யுட்களால் ஆசாரிய வணக்கம் கூறுகிறார்.

"நந்திசனற் குமான் சத்திய
ஞானிபடிசேர்
சரதனும் பரஞ்சோதி
மெய்கண்ட தேவன்
முந்துசன் பெயர் தலைவன்
கொற்றவன் குடியே
முதுபதியாம் உமாபதியும்
முறைமையிலே யாண்ட
செந்திருவின் பயன் சிற்றம்
பல நாடி ஞன்மெய்ச்
சிவஞான வடிவான
திருமேனி படைவாய்த்
தந்தியவர் சந்தான
குரவரின் மலர்த்தாள்
தப்பாமலே மனத்தி
லொப்பாக வைப்பாம்''

"மனவினையில் வாக்கினை
வருக்குமறி வரிய
வள்ளல்கள் சத்தினுன்
மறுகுமறி வினியேன்
தனையினிவி லாட்கொண்டே
பவனவனா டதுவாக்
தன்மையினின் மலவடிவு
தன்னை மன்னித்
தினையபினைய வனவிரு
வினைதுலையைப் பறித்து
செழுமி மன்று சிற்றம்
பலநாடி ஞனென்
முனைவினையு முடல்வினையும்
வருவினையு மறுத்து
முத்தியளிப் பவன் மலர்த்தாள்
சித்தமுற வைப்பாம்'

தொடர்ச்சி 4-ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமரனாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஷு ஆவணியீ சஉ வியாழக்கிழமை

இது சரியல்லவே!

இந்த யுத்தகாலத்திலே இங்குள்ள மக்களெல்லாரும் யுத்த விஷயத்திலும்; பஞ்சத்தினால் அதிக கஷ்டமின்றி வாழும் விஷயத்திலும் பரஸ்பரம் உதவிசெய்ய வேண்டுமென்பதே அரசினர் கொண்ட மேலான நோக்கம். இதனை யுத்தேசித்தே எங்கள் அரசினரும் இயன்றவரையில் இங்குள்ள மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய உணவுப் பொருள்கள் முதலியனவற்றின் விலையைக் கட்டுப்படுத்தியுள்ளார்கள்; ஆனால் இப்பொழுது அரிசி நெல் கோதுமை சீனி மண்ணெண்ணெய் முதலிய சில பொருள்களின் விலையைக் கட்டுப்பாட்டுக்கமைத்திருக்கின்றன; முன்னர் அரசினரால் விலை கட்டுப்படுத்தப்பட்ட ஏனைய பொருள் பண்டங்களெல்லாம் இப்பொழுது அந்தக் கட்டுப்பாட்டைக் கடந்து, கட்டுப்படுத்தப்பட்ட விலையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகவிலை விதித்து விற்கக் காண்கின்றோம். இதன் காரணம் யாதெனத் தெரியவில்லை. உழுந்து, பயறு, பருப்பு, மிளகாய் முதலிய கறிக்குரிய வெஞ்சனங்கள் தேயிலை காப்பி, சருக்கரை கற்கண்டு புடைவைமுதலாம்வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களெல்லாம் நாளொரு விலையாக உயர்த்தி விற்கப்படலாயின. தீப்பெட்டி பிண்ணாக்கு முதலிய பொருள்களும் காரணமின்றிக் கண்டபடி உயர்த்தப்படலாயின. அதிகாரிகள் ஏதும் ஒரு பொருள் விலைஉயர்த்தி விற்கப்படுகின்றதென அறிந்து அந்தப் பொருளுக்கு விலைக்கட்டுப்பாடு விதித்தால், உடனே இந்த வியாபாரிமார், அந்தக் கட்டுப்பாட்டு விலைக்கு விற்க இஷ்டமில்லாதவர்களாய் தத்தம் கடைகளிலிருந்து குறித்த பொருள்களை அப்புறப்படுத்தி மறைத்து வைத்துக்கொண்டு இங்கே அந்தப் பொருள் விலைக்கு இல்லையென்று மனங்கூசாது ஒரே முகமாய்ச் சொல்லிவிடுகிறார்கள்.

முந்தி ஒரு ரூத்தல் மூன்று நான்கு சதம்விற்ற தேங்காய்ப் பிண்ணாக்கை இங்குள்ள வியாபாரிமார் நாளுக்கு நாள் விலையேற்றி ரூத்தல் 10 சதம் வரையில் உயர்த்தி விற்றமையினாற் போலும் அதிகாரிகள் ஒரு துலாம் பிண்ணாக்கு 50 சத விகிதமாக விற்கப்படல் வேண்டுமென விலைக்கட்டுப்பாடு செய்தனர். நேற்றுப் பின்னேரம் சில கடைகளில் கட்டுப்பாட்டு விலைக்குப் பிண்ணாக்கு வாங்கத்தக்கதாயிருந்தது; ஆனால் அந்த மலிவான விலையை அறிந்து இன்று காலையில் அநேக சனங்கள் பணமும் எடுத்துக்கொண்டு பெரியகடைக்குப் பிண்ணாக்கு வாங்கவென்று ஓடிப்போனார்கள். என்ன விபரீதம்; பெரிய கடையில் ஒரு கடையிலும் பிண்ணாக்கு விலைக்கு இல்லாமற்போய்விட, பிண்ணாக்கு வைக்கப்பட்டிருந்த பெட்டிகள் சாக்குகள் வெறும்பெட்டிகளாக, வெறுஞ்சாக்குகளாக, போன சனங்களெல்லாரும் கொண்டுசென்ற காசோடு வெறுங்கையினராக மீண்டு வந்தனர். அப்படி மீண்டு வந்தவருட் சிலர் இவ்வியாசத்தை எழுதும் எம்மிடம் வந்து முறையிட்டுக் கவலைப்பட்டு "இந்த அக்கிரமத்தை உங்கள் பத்திரிகையில் வெளியிட வேண்டும்" என்று சொல்லி மனம் வருந்திப் போகின்றனர். இது உண்மைதானா என்று ஆராயவேண்டி நாமும் பிண்ணாக்கு வாங்கி வரும்படி ஒரு ஆளை விடுத்து விசாரித்த போது அந்த ஆளும் முந்தி வந்தவர்களைப் போற் பிண்ணாக்கில்லையாம் என்ற சொல்லோடு வந்து சேர்ந்தது. அந்தோ, உடலை விட்டு உயிர் நீங்காதபடி சனங்கள் பாதகாகப் பாடுபடும் இந்த வேளையில் இவ்வியாபாரிமார் 'வெந்த வீட்டிற் பிடுங்கியது ஆதாய'மென்று நிற்பது சரியல்லவே. இது உண்மைதானோ என்பதை எங்கள் சிறந்த மாகாணத்தலைவர் உடனே விசாரித்து வியாபாரிமார் செய்யும் அக்கிரமத்தையும் சனங்கள் அதனாற்படும் கஷ்டத்தையும் பொருள் நஷ்டத்தையும் இன்னே நீக்கி விடுவாரென இங்குள்ள மக்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

மகோற்சவமும் சைவப்பிரசங்கமும்

மண்டைதீவு சித்திவிநாயகர் கோவிலில் 8-ம் திருநாளாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிதொடக்கம் திரு. சி. பசுபதிச்செட்டியார் அவர்களின் உபயமாக விசேஷ அபிஷேகமும் பின்னர் பகல்உற்சவமும் இரவு குலசேகரன் பட்டினம் திருவளவாகம் சைவத்திருவாளர் ப. இராமநாதபிள்ளையவர்களால் "திருமுறைகண்டபுராணம்" என்னும் விஷயமாக உபந்நியாசமும் பின்னர் விசேஷ உற்சவமும் நடைபெறுமென அறியலானோம்.

ஜப்பானியர் இந்தியாவைத் தாக்குவார்கள்

சுங்கிங் ஆக 17—
இலையுதிர்காலத்தில் இந்தியாவைத் தாக்குவதற்கு ஜப்பானியர் முஸ்தீப்புச் செய்து வருவதாகச் சீன இராணுவ அதிகாரியொருவர் கூறினார். இந்தியாவின் கிழக்குக் கரையைத் தாக்கத் தாய்லாந்துக்கும் பர்மாவுக்கும் ஜப்பானியர் புதிய துருப்புக்களை அனுப்பியிருக்கின்றனர்.

(வீரக,)

காந்திஜியும் உண்ணாவிரதமும்

பம்பாய், ஆக, 17—
காங்கிரஸின் சத்யாக்ரஹ இயக்கம் சரியான வழியில் செல்லவில்லையென்று கண்டால் மகாத்மா காந்தி ஆகஸ்ட் மாசம் 29-ந் திகதி போல உண்ணாவிரதத்தை அனுஷ்டிக்கக் கூடுமென்று காந்திஜியின் தோழர்கள் கூறுவதாக 'ஹிந்து' நிருபர் அறிவிக்கிறார்.

கண்டியில் தேசாதிபதி தம்பதிகள்

கண்டி, ஆக, 17—
மேன்மை தங்கிய தேசாதிபதியும் லேடி கல்டிக்கோற்றும் இன்று பிற்பகல் கொழும்பிலிருந்து கண்டி ராசமாளிகைக்கு வந்தனர். அந்தரங்க காரியதரிசி மிஸ்டர், எச். ஏ. வி. டாலப்ஸ் உதவி அந்தரங்க காரியதரிசி மிஸ்டர், டி. டப்ளியூ பி. பாரன் ஆகியோர் தேசாதிபதி தம்பதிகளோடு வந்தனர்.

தேகவியோகம்

பிரம்மஸ்ரீ ந. வே. கார்த்திகேயக் குருக்கள்

வடமொழி தென்மொழி யிரண்டினையும் நன்கு பயின்றவரும், வேதாகம விற்பன்னரும் சைவக் கிரியைகளை நன்கு உணர்ந்து செய்யும் ஆற்றலுடையவரும் கெம்பீரமான தோற்றமுடையவரும் நல்லூர் கைலாசநாதசுவாமி கோவில் ஸ்தாபகரும், லேட், பொன். இராமநாதன் முதலிய அறிஞர்களால் சிறந்த குருக்களெனப் போற்றிச் சன்மானிக்கப்பட்டவரும், சோதிடம் முதலியன உணர்ந்தவரும் தம்பையாக் குருக்களென வழங்கப்பட்டு வந்தவருமாகிய பிரமஸ்ரீ ந. வே. கார்த்திகேயக் குருக்களவர்கள் எவரும் காத்திரா வண்ணம் சென்ற சனிக்கிழமை சிறிது நேரத்தில் தமக்கு நேர்ந்த இரத்தாசய நோயின் காரணமாக, நல்லூரிலுள்ள தம் குருவேஷத்திற்றன் மக்கள் சுற்றமித்திரர் முதலிய மற்றையோர் புலம்ப, எவரும் துயருற இவ்வுலக வாழ்வை ஒருவினர். இவர் யாழ்ப்பாணத் துள்ள சிறந்த குருக்களுளொருவரெனலாம். இவருடைய பிரிவு இங்குள்ள சைவமக்களுக்கு ஒரு பெருங் குறைவாகும்.

சிறைச்சாலையில் திரு. தேசாய்மரணம்

காந்திஜீ காரியதரிசியின் பரிதாபகரமான பிரிவு

பம்பாய் ஆக 15—
காந்திஜீயின் காரியதரிசி திரு. மகாதேவதேசாய் இன்று காலை மரணமடைந்தாரென்று இன்று வெளியான பம்பாய் அரசாங்க அறிக்கையொன்று கூறுகிறது. காந்திஜீயோடு திரு. தேசாயும் காவலில் வைக்கப்பட்டிருந்தார். திரு. தேசாய் இன்று காலை 8-40 மணிக்குக் காலமானார்.

சிறைச்சாலைகளின் இன்ஸ்பெக்டர் ஜெனரல், கர்னல் பந்தாரி. ஐ. எம். எஸ். மற்றும் இருவரும் இன்று காலை பேசிக்கொண்டிருக்கும்போது திரு. தேசாய் தனக்கு மயக்கம் வருவதுபோல இருப்பதாகத் தெரிவித்தார். கர்னல் பந்தாரி அவரை உடனே கீழே படுத்துக்கொள்ளும்படி கூறி நாடியைப் பரீக்ஷித்துப் பார்த்ததில் நாடி விழுந்திருப்பதையும் தேகம் நீலவிட்டுப் போயிருப்பதையும் கண்டார்.

அதே கட்டிடத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த காந்திஜியின் வைத்தியர் டக்டர். சுசீலா நாயர் உடனே உதவிக்கு அழைக்கப்பட்டார். வேறு வைத்தியர் எவரும் கிடைக்காமையால் மறுபடி ஐ. எம். எஸ். அதிகாரியொருவர் அழைக்கப்பட்டு ஊசிமூலம் மருந்து செலுத்தி இருதயத் துடிப்பை அதிகப்படுத்த முயற்சி செய்யப்பட்டது. எல்லா முயற்சிகளும் வீணாயின. திரு. தேசாய் முதலில் உடம்பு சுகமில்லையென்று கூறியபிறகு 20 நிமிஷங்களுக்குப் பின் மாரடைப்பால் காலமானார்.

சென்னைச் சட்டசபை உபதேர்தல் கிடையாது

சென்னை ஆக 14
"ஸ்ரீமான்கள் வி. ராஜகோபாலாச்சாரியார் எஸ். ராமநாதன் வ. சுப்பிரமணியம் பி. டி. வெங்கடாச்சாரி பி. மதனவேலு தேவர் ஆர்.எஸ். வெங்கடராமய்யர், ஜனாப் கே. எஸ். முகமது அப்துல்காதர் ராவுத்தர் ஸ்ரீமான்கள் பி. நடேச முதலியார் எல். கிருஷ்ணசாமி பாரதி [illegible] சாம்பமூர்த்தி ஜனப்பிரதிநிதி சபைத் தலைவர் பதவியையும் ராஜிநாமாச்செய்துவிட்டார். வி. பூவராகவ அய்யங்கார் ஜனாப் அகமது தம்பி முகமது மொய்தீன் மரைக்காயர் ஆகியோர் தங்களது ஜனப்பிரதிநிதி சபை அங்கத்தினர் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டனர். இதனால் காலியான ஸ்தானங்களுக்கு உபதேர்தல் நடைபெறாதென அரசாங்க அறிக்கை யொன்று கூறுகிறது.

கிரேக்க பிணைக்கைதிகள் சுடப்பட்டனர்

நாஜி பாரசூட் துருப்புகளின் இரகசிய ஒத்திகை

ஸ்தான்புல் ஆக 17—
கிரீட்டீவில் ஜெர்மன் பாரசூட் துருப்புகள் இரகசியமாக நடத்திய ஒத்திகையின்போது படையெடுப்புக்குப் பயந்தமை காரணமாகப் பல கிரேக்க பிணைக் கைதிகள் கிரீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டனர். எல்லாமாக சுமார் 100 கிரேக்க பிரமுகர் கைதுசெய்யப்பட்டுப் பிணைக்கைதிகளாக வைக்கப்பட்டிருக்கின்றனர். குறித்த தீவிலுள்ள ஒரு அமானுஷ்யமான பள்ளத்தாக்கில் ஜெர்மன் பாரசூட் துருப்புகள் இறங்கியதால் பிரிட்டிஷார் வந்து விட்டனரென்று வதந்தி கிளம்பிய பொழுது நிகழ்ந்த சம்பவத்தின் விளைவாக இவர்கள் தண்டனை அனுபவிக்கின்றனர். கிரேக்கர்கள் அவர்களை வரவேற்று அவர்களுக்கு உதவிசெய்வதற்காக மேற்படி பள்ளத்தாக்கிற்கு விரைந்து சென்றனர். அங்கு இறங்கியவர்கள் ஜெர்மானியரென அறிந்ததும் அவர்கள் போய் விட்டனர்.

உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்)

சுந்தரேசுவரன் பின்னரும் இடையிடையே முருகரம்மானுடன் கூடிக்கொண்டு முருகேசபிள்ளை வீட்டிற்குப் போய்க் காஞ்சனமாலையைக் காணுவதும் அவள் பாடும் பாடல்களைக் கேட்பதும் உண்டு. இதனால் அவ்விருவருக்குமிடையே அன்பும் நாளடைவில் அதிகப்படலாயிற்று; ஆனால் அங்கே சுந்தரேசுவரன் போய் வருவதை அவனுடைய தாய் தகப்பன் சகோதரி சின்னம்மாவின் மக்கள் முதலானோர் அறியார்; முருகேச பிள்ளை வீட்டுக் காரருக்கும் முருகருக்கும் இவனுக்குந்தான் தெரியும். இப்படிச் சுந்தரேசுவரன் நடந்து வந்தானெனினும் சின்னம்மாவிடத்தும் அவள் மக்களிடத்தும் முந்தி நடந்த விதமாகவே அன்புடன் நடந்து வந்தான்; குமாரசுவாமி சுந்தரேசுவரன் வீட்டிற்குப் போகாமல் விடவுமில்லை; சுந்தரேசுவரன் குமாரசுவாமி வீட்டிற்குப் போகாமல் விடவுமில்லை; இங்ஙனமாக ஒருநாள் தமயன் தனியே படித்துக் கொண்டிருக்குஞ் சமயம் பார்த்துச் சுந்தரேசுவரி அங்கே சென்று ஒன்றும் பேசாமற் சிறிது நேரம் சிந்தனையோடு நின்றாள்; அங்ஙனம் நின்ற தங்கையைத் தமயன் கண்டு "சுந்தரம், ஏனம்மா வந்து பேசாமல் நிற்கிறாய்? என்ன வேணும்" என்று அன்புடன் கேட்டான்; "ஒன்றுமில்லை அண்ணா, சும்மா நிற்கிறேன்" என்று சொல்லி முடிவதற்கிடையில் அவளுடைய முழுமதி யன்ன முகத்தைக் கவலையாகிய கருமுகிற்படலம் மறைக்கலானது; அதனை அவதானித்த தமயன் மனம் பொறாது "சுந்தரம் ஏன் அம்மா, கவலைப்படுகிறாய், என்ன நடந்தது? ஒன்றும் ஒளியாமல் எனக்குச்சொல்லடியம்மா" என்று பரிவுடன் கேட்டான். இந்த இரு சகோதரங்களும் ஒருவர்மீ தொருவர் அன்பும் மதிப்புமுடையவர்கள்; "அண்ணா, எனக்கு ஒரு கவலையுமில்லை; உங்களை யிட்டுத்தான் கவலைப்படுகிறேன்" என்று தங்கை சொல்லுதலும் தமயன் திடுக்குற்று, "தங்கைச்சி நான் உனக்கு என்ன பிழை செய்தேன்? என்னை யிட்டு நீ கவலைப்படத் தக்கதாக நடந்ததென்ன?" என்று ஆவலுடன் கேட்டான்.

தங்கை: "எனக்கு ஏதும் பிழை செய்தால் அதனாற் பாதகமில்லையண்ணா; நீங்கள் எனக்கேதுந் தவறு செய்தால் நான் மனவருத்தப் படமாட்டேன்; உங்களை நோவ மாட்டேன்; ஆனால் என்னைக் காட்டிலும் உங்களிடத்து அதிக அன்பும் விசுவாசமும் பாராட்டி நடந்து வரும் ஒரு உத்தமிக்குப் பிழை செய்ய நினைக்கிறீர்களென்று சொல்லக் கேட்ட நேரந்தொடக்கம் என் மனம் கவலைப் படுகிறது அண்ணா" (என்று சுந்தரேசுவரி சொல்லும் போது அவளுடைய கண்களில் நீர் ததும்பியது)

தமயன்: நீ அழாதேயடியம்மா நான் அப்படி ஆருக்கேனும் பிழை செய்ய மாட்டேன்; எந்த உத்தமிக்கு நான் தவறு செய்தேன்? அதை எனக்குச் சீக்கிரம் சொல்லு தங்கைச்சி.

தங்கை: வேறு யாருக்கு, கமலத்திற்குத்தான்.

தமயன்: கமலத்திற்கா! நானா பிழை செய்தேன்? இது என்ன விபரீதம்! கமலத்திற்குப் பிழை செய்ய நான் கனவிலும் துணியமாட்டேனே! தங்காய் என்ன நீ சொல்வதொன்றும் எனக்குப் புலப்படவில்லை.

தங்கை; கமலத்திற்கு நீங்கள் எப்போதாயினும் ஏதும் வாக்களித்ததுண்டோ?

தமயன்: இல்லை, கண்ணே, நான் ஒருபோதும் ஏதும் வாக்களித்ததில்லை; அல்லாமலும் கமலத்தோடு அப்படியான பேச்சு வார்த்தை நான் வைத்துக் கொள்வதில்லையே; கமலம் என்னுடன் பேசும்போது படர்க்கையில்தான் மரியாதையாகப் பேசுவாள்; நானும் அப்படியே இன்னும் அதிக மரியாதையுடன் பேசுவதேயன்றி வாக்களிப்பது போன்ற அப்படியான பேச்சு அந்த கமலத்துடன் ஒருபோதும் பேசியறியேன் தங்கைச்சி; ஏன் கமலம் உனக்கு ஏதும் அந்த விதமாகச் சொன்னதுண்டா?

தங்கை: இல்லை, அப்படியொன்றுஞ் சொல்லவில்லை யண்ணே; அல்லாமலும் கமலம் அப்படிப் பேசும் குணமுள்ள பிள்ளையுமல்ல; பெண்களாயிருக்கும் எங்களுக்குஉரிய மடம் நாணம் முதலாம் குணங்கள் பூரணமாகக் குடி கொண்டிருப்பது கமலேசுவரியிடத்திற்றானண்ணா நீங்கள் ஒருபோது கமலத்தின் அண்ணனிடம் அப்படியேதுஞ் சொல்லியிருப்பீர்களோ?

தமயன்: ஆர் குமாரசுவாமி அண்ணனிடமா? அவருக்கு நான் ஏதுஞ் சொல்லி யிருக்கக் கூடும். ஆம், ஆம், அவருக்கு அப்படியேதோ சொன்ன ஞாபகம் எனக்கு உண்டு; அதனால் இப்பொழுது வந்த தோஷமென்ன?

தங்கை: தோஷமொன்றுமில்லை; அவருக்குச் சொன்ன வாக்கை கமலம் அக்காளும் அறிந்திருக்கக் கூடும். அதனால் உங்களிடத்தில் கமலம் அதிகநம்பிக்கை வைத்திருக்கக் கூடும்; சரி அவையெல்லாம் இப்பொழுது எதற்கண்ணா; அந்த வாக்கின்படி நீங்கள் எப்பொழுதும் நடக்கச் சித்தந்தானே?

தமயன்: அந்த வாக்கின்படி எனக்கு எப்பொழுதும் நடக்கச் சித்தந்தான்; ஆனால் எங்கள் பெற்றாருடைய நோக்கத்திற்கு மாறாக நடப்பது முறையல்லவே தங்கைச்சி.

தங்கை: பெற்றாருடைய நோக்கமென்ன? அண்ணா; எங்கள் பெற்றார் கமலத்திற்குமாறாக ஏதுஞ் சொல்லமாட்டார்களே.

தமயன்: இல்லை, தங்காய், அம்மா மாறில்லை; அப்பருக்கு கமலத்தின் விஷயம் விருப்பமல்ல என்று நினைக்கிறேன்.

தங்கை: அப்பருடைய நோக்கம் என்ன அண்ணா?

தமயன்: அப்பருடைய நோக்கம் நான் அந்த முருகேசபிள்ளை வீட்டுப்பெண்ணைச் செய்யவேண்டுமென்பதுதான்.

தங்கை: அதுதான் அவருடைய நோக்கமென்பது உங்களுக்கு எப்படித் தெரியும் அண்ணா?

தமயன்: அவர் அப்படிச் சொன்னதாக எங்கள் அம்மா சொல்லக் கேட்டேன்.

தங்கை: அம்மாவின் பிரியமென்னவென்று, அண்ணா, உங்களுக்குத் தெரியுமா?

தமயன்: கமலத்தின் விஷயத்திற்றான் அம்மாவிற்குப் பிரியம் ஆனாலும் அப்பர் சொல்லைத் தட்டவொண்ணாதென்ற பயத்தினால் எங்கள் அம்மா எதிரொன்றும் பேசவில்லை.

தங்கை: அண்ணா, கேட்கிறேனென்று கோபிக்காதீர்கள்; அப்பருக்குப் பிரியம் அப்படி, அம்மாவிற்குப் பிரியம் இப்படி, உங்கள் பிரியம் எப்படியண்ணா?

தமயன்: எனக்கு கமலத்தில் எவ்வகையான வெறுப்புமில்லை. கமலம் ஒரு அருமையான குணமுள்ள உத்தம கன்னிகையென்பது எனக்கு நல்லாய்த் தெரியும்; ஆனால், சொல்லுகிறேனென்று தங்கைச்சி நீ மனம் வருந்தாதே; கமலம் இக்காலத்து நாகரிகத்திற்குத் தக நடந்துகொள்ளத் தெரியாத பெண்ணென்றதை யிட்டுத்தான் எனக்குக் கவலை. கமலத்தின் போக்குச் சுத்த கருநாடகப்போக்கு; அதையிட்டுத்தான் யோசிக்கிறேன்.

தங்கை: உங்கள் முருகேசபிள்ளை வீட்டுப் பெண்?

தமயன்: அந்தப் பெண்ணைப் பற்றிச் சொல்வதென்ன? நீதான் அன்று நேரிற் பார்த்தாயே; அவளுடைய இனிமையான சங்கீதத்தைக் கேட்டாயே! அவள் சங்கீதத்தைக் கேட்டு அன்று உருகாதவர் ஆர்? அப்படிப்பட்ட கன்னிமணியாய் வந்து வாய்ப்பதற்கு புண்ணியம் வேண்டும்; எல்லாருக்கும் அப்படி வாய்க்குமா? தங்கைச்சி.

தங்கை; அந்தப் பெண்ணுடைய குணம் ஒழுக்கம் குலம்?

தமயன்: அப்படிப் பாடக்கூடிய பெண் கூடாத குணமாயிருப்பாளா? அல்லாமலும் குணத்தையும் ஒழுக்கத்தையும் என்னிடம் வந்தபின்பு நான் திருத்திக் கொள்ளுவேன்; குலத்தைப்பற்றி இந்தக் காலத்தில் ஆர் பார்க்கிறார்கள்; குலத்திலுள்ள குறைவு பணத்திலே மறையும், மேலும் அவர்களும் சாதிமாறிற் குறைந்தவர்களல்லவென்று முருகரம்மான் அப்பருக்குச் சொல்லியிருக்கிறார்.

தங்கை: (புன்சிரிப்புடன்) ஆம் அண்ணா, குணத்தையும் ஒழுக்கத்தையும் நீங்கள் பிறகு திருத்திக் கொள்வீர்கள்; சாதிமாறலைப்பற்றி முருகரம்மான் பார்த்துக்கொள்ளுவார். சங்கீதம் விசேஷமாக அந்தப் பெண்ணிடமிருக்கிறது; அது உங்களை மாத்திரமல்ல கேட்டாரெல்லாரையும் உருகச்செய்யும்; ஆனால் ஒருவருடைய சில குணங்களை இடையிலே திருத்த முடியாதென்று பெரியோர் சொல்லியிருக்கிறார்களே. நீங்கள் அந்தப் பெண்ணின் குணத்தைத் திருத்தமுடியாவிட்டாற் பின் என்ன செய்வீர்கள்?

தமயன்: எந்தக் குணத்தையும் அன்பினாலே திருத்தலாந்தங்கைச்சி

தங்கை: அப்படியானால், "நடையும் நடைப்பழக்கம்நட்பந்தயையும் கொடையும் பிறவிக் குணம்" என்று பெரியோர் கூறியிருக்கின்றார்களே அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

தமயன்: (சிறிது யோசித்து) நீசொல்வதும் நியாயந்தான்; ஆனால் அந்தப்பெண் நல்ல குணமில்லாதவளென்று இப்பொழுது நாம் எப்படித் தீர்க்கமாகச் சொல்லமுடியும்?

தங்கை: அண்ணா, ஒருவர் வீட்டுப் பெண்ணைப்பற்றிக் குற்றமாகச் சொல்லி நான் பழிமூட்டை கட்டிக்கொள்ளமாட்டேன்; ஆனாலும் கமலேசுவரியின் குணங்குலங்களைப் பற்றி நாங்களெல்லாரும் நல்லாய் அறிவோம்; அந்தப் பெண்ணின் குணத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியாது; நானுமறியேன்; குணம் நல்லாயிருக்கக்கூடும் அல்லாமலிருக்கவுங்கூடும்; ஆனால் வந்தபின் நல்லவாயிராவிட்டால் ஒன்றுஞ்செய்யமுடியாதென்று நினைக்கிறேன் அண்ணா! மேலும் நீங்கள் கமலத்தைக் கருநாடகம் என்று குறை சொல்லுகிறீர்கள்; அந்தக் கருநாடகத்தால் ஒரு பிழையும் வராது; அதை வேணுமானால் திருத்திச் சொக்கட்டமாக நடக்கவுஞ் செய்யலாம். ஆனால் உங்கள் முருகேசபிள்ளை வீட்டுப் பெண் சினிமாநாடகமாகக் காணப்படுகிறதே; அதற்கென்ன செய்வது; இன்னமும் அந்தப் பெண் சங்கீதத்தில அதிகப்பட்டால் வீட்டிலிருந்து இல்லறகருமங்களைப் பார்ப்பதற்குச் சமயந்தானும் இல்லாமற் போய்விடும் அண்ணா; அல்லாமலும் நீங்கள் சங்கீதமொன்றை யிட்டுத்தானே அந்தப் பெண்ணில் விருப்பப்படுகிறீர்கள்; மற்றைக் குணங் குலம் ஒழுக்கம் அழகு என்னுமிவைகளில் அந்தப் பெண்ணைக்காட்டிலும் எங்கள் கமலேசுவரி குறைந்தவளல்லவேயென்பதை நீங்களும் ஏற்றுக்கொள்வீர்கள்தானே அண்ணா!

தமயன்: சங்கீதமொன்று தெரிபதென்றதல்லாமல், மற்றைய விஷயங்களிலே கமலம் அந்தப் பெண்ணைக் காட்டிலும் கூடியவளென்பதை நான் மறுக்கமாட்டேன் தங்கைச்சி; உள்ளதை உள்ளபடி சொல்லவேண்டும்.

தங்கை: அப்படியானால் நான் ஒரு உபாயஞ் சொல்லுகிறேன்; நீங்கள் கேட்கிறீர்களா அண்ணா!

தமயன்: ஓம், தங்கைச்சி, நான் நூறுமுறையுங் கேட்கிறேன்; நீ சொல்லு.

தங்கை: முந்தி நீங்கள் நினைத்த பிரகாரம், வாக்களித்தபடி, எங்கள் கமலத்தையே கல்யாணஞ் செய்வதென்று நிச்சயித்துக்கொள்ளுங்கள்; சங்கீதங் கேட்கவேணுமானால், எங்கள் அப்பரிடம் எனக்கு வேணுமென்று சொல்லி, திறமான விலையுயர்ந்த 'றேடியோ ஸெற்' ஒன்று வாங்குவித்து எங்களுடைய தலைவாசலில் அமைப்பித்து விடுகிறேன்; அப்படி வைத்துக்கொண்டால், முருகேசர்வீட்டுப் பெண்ணின் பாட்டைக் காட்டிலும் நூறுமடங்கு திறமான பாட்டுக்களையும் வேறு நன்மையான சமாசாரங்களையும் தீமையான சமாசாரங்களையும் நினைத்தநேரமெல்லாங் கேட்கலாம்; இதுதான் நல்ல யோசனை அண்ணா.

இப்படித் தன் தங்கை சொல்லக் கேட்ட சுந்தரேசுவரனுக்கு அச்சோத்தில எழுந்த சிரிப்பையடக்க முடியாமல் அவன் பெருஞ்சிரிப்புச் சிரித்தான்; தன் அருமையான தங்கையை மெச்சினான். —வரும்

'பச்சை அரிசிச் சோறு தின்ற பராக்கிரம பாகு'

பொதுமக்கள் பலரின் தவறுதலான எண்ணம்

'இலங்கை யுத்தஞ் செய்கிறது' என்பதுபற்றி விற்பனை வசதிக் கமிஷனர் திரு. ஆர். எச். பேஸ்ட். நேற்றிரவு ரேடியோவிற் பேசியதாவது:-

பச்சை அரிசிச் சோற்றை உண்ணமுடியாதென்று பலர் பல சந்தர்ப்பங்களில் கூறியிருக்கின்றனர். புழுங்கல் அரிசியே தமக்குத்தேவையென்று இச்சாரார் கூறியதுண்டு. இது வியர்த்தமென்று நான் சொல்லுகிறேன்.

அநேக நூற்றாண்டுகளாக அரிசியே இலங்கையின் பிரதான உணவாக விருக்கிறது. இலங்கையின் புகழ்பெற்ற வீரர்களான பராக்கிரமபாகு துட்டகைமுனு ஆகியவர்களும் அரிசியையே உணவாகக் கொண்டனர். அவர்கள் பச்சை அரிசிச் சோற்றையே உண்டனர். ஏறக்குறைய 50 வருஷங்களுக்கு முன்னர்ப் புழுங்கல்அரிசி பர்மாவில் கண்டு பிடிக்கப்பட்டது. இது ஓர் நவீனமான விருப்பமாகும். புழுங்கல் அரிசி பச்சையரிசியை விடக்கூடுதலாகச் சீரணிக்கத் தக்கதென்று பலர் தவறுதலாக அபிப்பிராயப்படுகின்றனர்.

ஓர் புதிய இனச் சோற்றை உண்ணுவதன் பின் சீரணிப்பின்மையேற்படுவதன் காரணம் விரைவாக அல்லது அதிகமாக உண்பதே என்று கூறப்படுகிறது. வெளியூர் அரிசிச் சோற்றை எவ்வளவு வேகமாகச் சாப்பிடுகிறீர்களோ அதே வேகத்துடன் இலங்கை அரிசிச் சோற்றை நீங்கள் தின்னமுடியாது.

யுத்த முயற்சிக்கு உதவி

புழுங்கல் அரிசியை உற்பத்தி செய்யும் நேரத்தை விட மிகக் குறைவான நேரத்தில் பச்சை அரிசியை உற்பத்தி செய்ய முடியும். ஓர் அரிசி ஆலை தினமொன்றுக்கு 24 மணி நேரம் வேலைசெய்யுமானால் அதிக பச்சை அரிசியைக் குத்தக் கூடியதாக விருக்கும். வெற்றிகரமான யுத்த முயற்சிக்கு விளைச்சலும் ஆகக் கூடுதலான உற்பத்தியும் அவசியமான இக்காலத்தில் நாம் பச்சை அரிசிச் சோற்றையே உண்ண வேண்டும்.

ஜெர்மன்-ஜப்பான் இரகசிய ஒப்பந்தம்

சீனப்பத்திரிகை கூறும் விபரம்

"டாகங்போ" என்ற சீனப்பத்திரிகை பின்வருமாறு எழுதுகிறது: இந்தியாமீது படையெடுக்க ஜப்பான் இன்னும் முற்றிலும் தயாராகவில்லை. அது ருஷ்யப் போர் முனையில் ஜெர்மன் முன்னேற்றத்தைக் கவனிப்பதற்குப் பதிலாக (வளாடிவாஸ்டக்கைத் தாக்க) ருஷ்யாவை முதுகில் குத்துவதற்காக வரும் [illegible] காத்திருக்கிறது. ஜெர்மானியர் ஓரிடத்தை அடைந்ததும் ஜப்பான் ருஷ்யாவின் கிழக்கு எல்லைப்புறத்தைத் தாக்க வேண்டுமென ஜெர்மானியருக்கும் ஜப்பானியருக்கு மிடையில் ஒரு ஒப்பந்த மேற்பட்டிருப்பதாகப் பிரிட்டிஷ் உத்தியோக அதிகாரிகளிடமிருந்து இங்கு வரும் அறிக்கைகள் கூறுகின்றன. இந்த இடம் ஸ்டாலின்கிராடாக இருக்குமென்று சில உத்தியோகஸ்தர்கள் நம்புகின்றனர். துரோகத் தாக்குதலுக்கு முஸ்தீப்புச் செய்த ஜப்பான் ருஷ்யாவை ராஜதந்திரிகள் மூலம் பயமுறுத்தாமல் அல்லது ஒரு யுத்தம் தொடுத்திருப்பதாகத் தெரிவிக்காமலே ருஷ்யாவைத் திடீரெனத் தாக்கக்கூடும்.

லண்டனிலுள்ள சீன தூதராபீஸ் ராணுவ அதிகாரியான கர்னல் டாக்டர் ஷூசிவால் இன்று ராய்ட்டருக்கு அளித்த பேட்டியில் கூறுவதாவது:—

ருஷ்ய மஞ்சூரிய எல்லையில் ஜப்பானிலிருந்தும் இந்தோ சீனாவிலிருந்தும் தருவிக்கப்பட்ட 31½ ஜப்பானிய டிவிஷன்கள் இருக்கின்றன. அதாவது 7 லக்ஷம் முதல் 9 லக்ஷம் ஜப்பானிய சிப்பாய்கள் இருக்கின்றனர். அங்கு 7 அல்லது 8 டாங்கி ரெஜிமெண்டுகளும் பல குதிரைப் படைகளுமிருக்கின்றன. இவை மோட்டார்ப்போக்கு வரத்து கவசம் தரித்த மோட்டார்களுடன் இருக்கின்றன. ஆயிரம் முதலதர யுத்த வெடிகுண்டெறியும் விமானங்களிருக்கின்றன.

மலேயா சிங்கப்பூர் பிலிப்பைன் தீவு இவற்றை ஜெயித்த ஜெனறல் யமஷிடா மஞ்சூரியாவுக் கனுப்பப்பட்டிருப்பதால் ஜப்பான் ருஷ்யாவைத் தாக்க முஸ்தீப்புச் செய்கிறதென்ற சீன அபிப்பிராயத்திற்கு ஆதாரமேற்படுகிறது. சீனாவிலிருந்து ஒரு டிவிஷனையே வடக்கே அழைத்திருக்கிறது. ஜப்பானியர் இந்தியாவைத் தாக்குவதற்கு வேண்டிய பலத்துடனோ அல்லது போதிய கப்பல் வசதிகளுடனோ இல்லை. அவர்கள் பசிபிக் தாக்குதலிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள வேண்டியிருக்கும் அவர்கள் இந்தியாவைத் தாக்க முயலுவது இந்தியாவின் உள்நாட்டு நிலைமை எப்படி அபிவிருத்தியடைகிறதென்பதைப் பொறுத்திருக்கிறது.

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

† இசைத்தட்டு

வெள்ளி ஆகஸ்ட் 21

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானொலி வாத்ய கோஷ்டி 7-40 காலை சங்கீதம் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 மொழியின் புலவர் † 8-20 வி. வி. ஆர். எம். கிருஷ்ணையர் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சித்திரகீதம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 வி. வி. ஆர். எம். கிருஷ்ணையர் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 எஸ். கே. சதாசிவம் பிள்ளை பாட்டு 5-40 'தூரான்-ஓ-வுசீப்' 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 விமானத் தாக்குதல் பாதுகாப்பு 6-47 சூரியனார் கோயில் கே. நாராயணசாமி பிள்ளை நாகஸ்வரம் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-45 தேவாரம் † 8-00 எஸ். கே. சதாசிவம் பிள்ளை 8-30 உலக விவகாரங்கள் ஆங்கிலம் 8-45 சூரியனார்கோயில் கே. நாராயணசாமி பிள்ளை நாகஸ்வரம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

சனி ஆகஸ்ட் 22

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானொலி வாத்ய கோஷ்டி 7-40 தேர்ந்த நூல்கள் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 திருப்புகழ் மணி † 8-20 காட்டுப்புத்தூர் ராமகிருஷ்ண ஐயர் வயலின் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 பாலம் ராமமூர்த்தி பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஐரோப்பிய சங்கீதம் † 2-00 தமிழில் செய்திகள் 2-05 காட்டுப்புத்தூர் ராமகிருஷ்ண ஐயர் வயலின் 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 பாலம் ராமமூர்த்தி பாட்டு 5-40 திருமொழி விளக்கம் 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 விமானத் தாக்குதல் பாதுகாப்பு 6-47 திரைகானம் † 7-15 பஸிபிக்கில் பாயும் ஸ்தலங்கள் 7-30 அறிவிப்புகள் 7-45 மதராஸிலுள்ளபடி குன்னக்குடி வெங்கடராம ஐயர் 9-00 தாலாட்டு † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

ஞாயிறு ஆகஸ்ட் 23

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சினிமாப் பாட்டுகள் 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 துதிப் பாடல்கள் † 8-20 சத்தியமங்கலம் கே. வெங்கடராமன் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

12-00 டாக்கி கானம் † 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எம். எஸ். ராமஸ்வாமி ஐயங்கார் வீணை 2-00 தமிழில் செய்திகள் 2-05 இசைக் கதம்பம் † 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 எம். என். ராமஸ்வாமி ஐயங்கார் வீணை 5-40 தேவராதனே சோமன் கதாசிக்ஷை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 தமிழில் செய்திகள் 6-47 சத்தியமங்கலம் கே. வெங்கடராமன் பாட்டு 7-15 ஆப்பிரிக்காக் காட்சி 7-30 அறிவிப்புகள் 7-45 சிவ கலாசாலைகளுக்கு 8-00 எம். என். நடராஜ பிள்ளை புல்லாங்குழல் கே. வி. தியாகராஜன் வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

திங்கள் ஆகஸ்ட் 24

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வானொலி வாத்ய கோஷ்டி 7-40 திரைகானம் † 8-00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-10 கே. சாம்பமூர்த்தி † 8-20 டி. எம். வேணுகோபால பிள்ளை நாகஸ்வரம் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 சித்திரகீதம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 டி. வி. ஜனகம் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-30 டி. எம். வேணுகோபால பிள்ளை நாகஸ்வரம் 5-45 இசைப் பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 6-35 தமிழில் செய்திகள் 6-45 விமானத் தாக்குதல் பாதுகாப்பு 6-47 டி. வி. ஜனகம் பாட்டு 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-45 கே. பி. கந்தாம்பாள் பாட்டு கும்பகோணம் சிவவடிவேலு பிள்ளை வயலின் வானாடி சுப்ரமணிய பிள்ளை மிருதங்கம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டன் அஞ்சல் 10-00 ஒலிபரப்பு முடிவு.

தாய் மொழியிலேயே பாடங்கள் கற்பிக்க வேண்டும்

ஸ்ரீமான். எஸ். வையாபுரிப் பிள்ளை பிரசங்கம்

திருநெல்வேலி, ஆக. 6— நேற்று மாலை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப்பிள்ளை, பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கலாசாலையின் வீரமாமுனிவர் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் பேசும்போது தமிழ் நாட்டுக் கலாசாலைகளில் எல்லாவிதப் பாடங்களையும், உயர்ந்த வகுப்புக்களிலுங் கூடத் தாய் மொழியிலேயே கற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்றும், இதில் கொஞ்சம் கஷ்டங்கள் இருந்த போதிலும் ஆசிரியர்களும் அதிகாரிகளும் தயங்கக் கூடாதென்றும், இது சம்பந்தமாகப் பழைய பிரதம மந்திரி ராஜாஜி செய்த சேவை முழுவதும் பலிதமாகவில்லை யானாலும் பாராட்டத்தக்கதென்றும் சொன்னார். வித்வான் புன்னைவனநாத முதலியார் தலைமை வகித்தார்.

காந்திஜி கொள்கையைக் கிரீன்வுட் குறை கூறுகிறார்

பிரதானமான பிரச்னைகளை அவர் கவனிக்கவில்லையாம்

லண்டன் ஆகஸ்ட் 16

'காந்திஜி தற்பொழுது உலகத்தில் இருந்துவரும் அபாயகரமான நிலைமையைச் சற்றும் கவனிக்கவேயில்லையென்று தோன்றுகிறது' என்று தொழிலாளர் தலைவர் திரு. ஆதர் கிரீன்வுட் இன்றிரவு வட அமெரிக்காவுக்கு ரேடியோவில் பேசுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

எனக்குக் காந்திஜியிடம் மகத்தான மதிப்பு இருந்தபோதிலும் அவர் முக்கியமான பிரச்னைகளைக் கவனிக்கவில்லையென்று கூறுகிறேன். எங்களுடைய வேண்டுகோளுக்கு இந்தியாவிலிருந்து சாதகமான பதிலொன்றும் கிடைக்கவில்லை. இந்தியாவில் சமரசப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க விரும்புவோர் பலர் இருக்கின்றனர். இந்தியாவில் துரதிர்ஷ்டவசமான அறிக்கைகள் பல விடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு நான் வருத்தப்படுகிறேன்.

ஐக்கியநாடு ரூஸ்வெல்ட் கூறியிருக்கும் நான்கு சுதந்திரங்களையும் அட்லாண்டிக் சாசனத்தில் கூறப்பட்டிருக்கும் அம்சங்களையும் யுத்தம் வெற்றிகரமாக முடிவதற்கு முன்பே அமுலுக்குக் கொண்டுவர முடியுமென்று உலகில் யாரும் நினைக்கவில்லை. சுதந்திர விரோதிகள் அழிக்கப்படவில்லையென்றால் ஆசியா கிழக்கிலுள்ள சிறு வல்லரசுகளும் ஐரோப்பாவிலுள்ள சிறு தேசங்களும் வெற்றிபெறவில்லையென்றால் அடிமை நாடுகளுக்கும் விமோசனமில்லை.

காந்திஜி நெருக்கடிக்குப் பிரிட்டனே பொறுப்பாளி என்று கூறினால் இந்தியத் தலைவர்களுக்கும் இதில் பொறுப்புண்டு. வருங்காலத்தில் இதுவரை கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை எந்தப் பிரிட்டிஷ் அரசாங்கமும் மறக்க முடியாது. இவ்வாக்குறுதிகளை நிறைவேறும்படி செய்வது தன்னால் இயன்றவரை தொழிலாளர் கட்சி உறுதிகொண்டிருக்கிறது. இதற்கு ஐக்கிய தேசங்கள் பொறுப்பாக இருக்கின்றன. சுதந்திரம் வெற்றி பெறவேண்டுமென்போர் எல்லோரும் இந்தியாவின் மனப்பூர்வமான ஒத்துழைப்பைப் பெறத் தங்கள் செல்வாக்கை உபயோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சுதந்திர உணர்ச்சி மீதே வாழவேண்டுமென்று கோஷிப்போமாக. இதுவே என்னுடைய நம்பிக்கை. தொழிற்கட்சியின் லட்சியமும் இதுவே. எங்களுடைய வார்த்தைகளைக் காப்பாற்றுவோம்.

வெளியேறும் இந்தியத் தொழிலாளர் எண்ணிக்கை

வருடா வருடம் அதிகரித்து வருகிறது

இவ்வருட ஆரம்பத்திலிருந்து ஜூலை மாதம் வரையிலுள்ள 7 மாத காலத்தில் 23315 இந்தியத் தொழிலாளர் இந்தியாவுக்குத் திரும்பினர். இதே காலத்தில் 1680 இந்தியத் தொழிலாளர் மட்டும் இலங்கைக்கு வந்தனர்.

அதேசமயம் சென்ற வருடத்தில் 14073 பேர் திரும்பினர். 1497 பேர் இலங்கை வந்தனர். சென்ற வருடத்திலோ அல்லது அதற்கு முந்திய வருடத்திலோ திரும்பியவர்களின் எண்ணிக்கையை விடச் சென்ற 7 மாத காலத்தில் திரும்பியவர்களின் எண்ணிக்கை கூடுதலாகவிருக்கிறது. 1940 ம் வருடத்தில் 18138 பேரும் 1941ம் வருடத்தில் 19653 பேரும் திரும்பியிருக்கின்றனர்.

சென்ற மாதத்தில் மொத்தம் 2605 இந்தியத் தோட்டத் தொழிலாளர் வெளியேறினர். இதே காலத்தில் 269 பேர் மட்டும் வந்தனர்.

இந்தியாவில் பல இடங்களில் அமைதி

பம்பாய் ஆலைகள் திறக்கப்பட்டு விட்டன

திருநெல்வேலி மாணவர்கள் கூட்டம்

புதுடில்லி, ஆக 14

இன்று புதுடில்லியில் வெளியான அரசாங்க அறிக்கையில் ஒருவிதமான சம்பவங்களும் நிகழ்ந்ததாகக் குறிப்பிடப்படவில்லை. முஸ்லிம் வாசஸ்தலங்களில் உள்ள அநேக கடைகள் திறக்கப்பட்டுவிட்டன. அலுவல்கள் முன்போல நடைபெற ஆரம்பித்துவிட்டதாகத் தென்படுகிறது. இருந்தாலும் நெருக்கடி தீர்ந்தபாடில்லையென்றே சொல்லவேண்டும். சில இடங்களில் எந்தநேரத்திலும் மறுபடியும் கலகம் ஆரம்பமாகலாம். புதுடில்லியில் எல்லாம் அமைதியாகவே இருக்கிறது.

பம்பாய் அரசாங்கத்தின் அறிக்கை

பம்பாயில் நிலைமை அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று இன்று வெளியான பம்பாய் அரசாங்க அறிக்கை கூறுகிறது. சிற்சில சிறு சம்பவங்களைத் தவிர, நகரம் அமைதியாகவே இருக்கிறது. 5 மணி வரை ஒருவித சம்பவமும் நடைபெறவில்லை. அநேகம் நெசவு ஆலைகளும், தொழிற்சாலைகளும் சாதாரணமாக வேலைசெய்ய ஆரம்பித்து விட்டன. எல்லா அரசாங்கக் கலாசாலைகளும் மறுபடியும் திறக்கப்பட்டுவிட்டன. புதன்கிழமை இரவில் சந்தேகப்பட்ட பேர்வழிகள் இன்னும் அநேகரைப் பொலிசார் கைது செய்தனர். புதன்கிழமை பன்று மூன்றுபேர்கள் கொல்லப்பட்டனர். 42 பேர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 7 பேர்கள் பொலிசார்கள்.

லக்ஷ்மணபுரியில் எச்சரிக்கையின்றிச் சுட அனுமதி

லக்ஷ்மணபுரி, ஆக 14

போஸ்ட் ஆபீஸ்களில் நுழைந்து கொள்ளையடித்தல், அரசாங்கத்துக்குச் சொந்தமான சொத்துக்களையும் சாமான்களையும் நாசஞ்செய்தல் முதலிய அக்கிரமச்செயல்கள் நடைபெற்றதனால் யாராவது அவ்விதம் கொள்ளையடிக்கவோ கலகம் செய்து சூறையாடவோ செய்து கொண்டிருப்பது பொலிசாருக்குத் தெரியவந்தால் அவர்கள் அப்பேர்வழிகளை எச்சரிக்கையின்றிச் சுட்டுவிடலாம் என்று பொலிசாருக்கு அனுமதி கொடுத்திருப்பதாய் அறிக்கை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் முனிசிபாலிடி இவைகளுக்குச் சொந்தமான சொத்துச் சாமான்களைக் கொள்ளையடிப்பவர்களும், பொதுஜன சௌகரியத்திற்கும் உபயோகத்திற்கும் வேண்டிய சாமான்கள் முதலியவைகளைக் கொள்ளையடித்து நாசஞ்செய்பவர்களும் இவ்விதம் எச்சரிக்கையின்றிச் சுடப்படுவார்கள்.

அலகாபாத்தில் துப்பாக்கிப்பிரயோகம்

அலகாபாத், ஆக 14

கட்டுக்கு அடங்காத ஒரு ஜனக்கூட்டத்தின் மேல அலகாபாத்தில் இராணுவத் துருப்புகள் மூன்று தடவை சுட்டன. ஒருவர் இறந்தார். ஒருவருக்குப் படுகாயம். இதுசமயம் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். நகரத்தின் வடபகுதியில் திருட்டுகளும் கொள்ளையும், நெருப்பு வைத்தலும் முதலிய அக்கிரமச்செயல்கள் ஆரம்பமாயின. 'ஏ. ஆர். பி.' அம்புலென்ஸ் தீக்கிரையாக்கப்பட்டது. நகரத்திற்கு வெளியே ஒரு போஸ்ட் ஆபீசும் புகைரதநிலையமும் தாக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டன. சேதம் சொற்பம் ஏற்பட்டது. மறு உத்தரவுவரை அலகாபாத சர்வகலாசாலை மூடப்பட்டுவிட்டது. மாணவர்கள் தத்தம் வீடுகளுக்கும் ஊர்களுக்கும் போய்விடும்படி அறிவிக்கப்பட்டு விட்டார்கள்.

வங்க மந்திரிகள் இருவர் ராஜிநாமா?

கல்கத்தா, ஆக 14

வங்காள அரசாங்க மந்திரிகளாகிய சந்தோஷ்குமார் பாஸுவும் பிரமதநாத பானர்ஜியும் மந்திரிசபையிலிருந்து ராஜிநாமாச்செய்துவிட உத்தேசித்திருப்பதாய் முன்னேற்றக் கட்சியின் கூட்டத்தில் அறிவித்ததாய்ச்சொல்லப்படுகிறது. வங்காள முன்னேற்றக் கூட்டுக்கட்சியின் கூட்டம் அடுத்தவாரத்தில் நடைபெறும். அதுவரையிலும் வங்காள மாகாணத்தின் பிரத்தியேகமான நிலைமையை உத்தேசித்து அவர்கள் தங்கள் பதவிகளை ராஜிநாமாச் செய்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாய்க் கூறப்படுகிறது. மற்றொரு மந்திரியான திரு. சியாம பிரஸாத் முகர்ஜியும் ராஜிநாமாச் செய்துவிட்டாரென்ற பலமான வதந்தி உலாவுகிறது.

திருநெல்வேலி, ஆக 11

நேற்றுப் பிற்பகலில் இவ்வூர் இந்துகலாசாலை பாளையங்கோட்டை செயின்ட் ஜோன் கலாசாலை, செயின்ட் சேவியர் கலாசாலை மாணவர்கள் மகாத்மாகாந்தி முதலிய காங்கிரஸ் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டதை யொட்டித் தங்களுடைய உணர்ச்சியைத் தெரிவிக்கப் பாளையங்கோட்டையிலிருந்து திருநெல்வேலிக்கும் பெரிய ஊர்வலமாகத் தேசீய கோஷங்களைச் செய்து கொண்டு வந்தார்கள். மாலையில் தாம்பிரபரணி நதி மணலில் ஒரு மாணவர் கூட்டம் நடந்தது. பல மாணவர்கள் பேசியபிறகு இந்நாட்டில் தேசீய அரசாங்கம் உடனே ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்ற ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பாளையங்கோட்டையில் ஊர்வலம் வரும்போது ஒன்றிரண்டு சம்பவங்கள் நடந்த போதிலும் மொத்தத்தில் எல்லாம் அமைதியாகவே நடைபெற்றது. அதிகாரிகளும் தலையிடவில்லை.

ஸ்ரீமதி கஸ்தூரிபாய்

பூனா ஆக 14—

ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தியும் டாக்டர் மிஸ். சுசீலா நாயரும் பம்பாயிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டனர். இவர்கள் கிர்கி ஸ்டேஷனில் இறக்கப்பட்டு [illegible] காவலில் வைப்பதற்காகக் கொண்டு போகப்பட்டனர்.

இக்கால இலக்கியப் போக்கு 1

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேனாட்டு முறைகளைப் பின்பற்றியதன் பயனாக ஏற்பட்ட ஒரு போக்குத் தான் தமிழ்ச் சிறுகதை இலக்கியம்.

இந்தச் சிறுகதை இலக்கியம், தமிழ் இலக்கியம் ஆரம்பித்த நாட்டொட்டே உண்டாயிருக்கிறது என்பதையும் உணரவேண்டும். பழைய இலக்கண ஆசிரியரான தொல்காப்பியர் கூடக் கதை இலக்கியத்தைப் பற்றிக் கூறியிருக்கிறார். அகம், புறம், கலித்தொகை முதலிய நூல்களில் மிகச் சிறப்பான சிறு கதைகள் பாட்டிற் சித்தரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஆனால் இவற்றைப் பற்றிக் கூறுவது இப்பேச்சின் நோக்கமல்ல. இக்கால இலக்கியத்தின் போக்குப் பெரும்பாலும் சிறுகதை மயமாகவே இருப்பதால் தமிழ் நாட்டிற் பரவிவரும் இக்கதை இலக்கியச் சிறப்பைப் பற்றியே இப்பொழுது கூறுவோம்.

தமிழ்நாட்டுச் சிறுகதைகள் என்ற பெயருடன் மயிலாப்பூர் அலையன்ஸ் கம்பெனியார் இப்பொழுது விளங்கி வரும் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களின் கதைகளையெல்லாம் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள். மகாகவி வ. வே. சுப்பிரமணிய ஐயர் எழுதிய "மங்கையர்க்கரசியின் காதல்" முதலிய கதைகள் தமிழ் நாட்டுச் சிறுகதைகளில் முதல் கதைத் தொகுதியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

இப்பெரிய தேசபக்தருடைய வாழ்க்கை மிக அற்புதமானது. அவ்வாறே அவருடைய வீர வாழ்க்கையின் முடிவும் அதிசயமானது. அவர் எழுதியுள்ள ஒரு சிறு கதையே போன்றது. ஆற்றில் விழுந்த கன்னிகையைக் காக்குமாறு ஐயரும் பாய்ந்தார். ஆறு இருவரையும் உண்டு பசி தீர்த்து விட்டது.

ஐயர் சிறுகதை எப்படி இருக்க வேண்டுமென எழுதிய குறிப்பே இவருடைய சிறு கதைகட்கு ஒரு பெரிய வியாக்கியானமாகும். 'கதைகள் கற்றை நிரம்பியவையாய், ரஸ பாவோபேதமாய் இருக்க வேண்டும்' என்பது ஐயருடைய அபிப்பிராயம்.

நமது பொது வாழ்வு நல்ல நிலைமை அடைந்து நாடு சுகமும் கௌரவமும் பெற வேண்டின் மக்களுடைய நடையும் குணங்களும் உயர வழிப்பட நாம் முயற்சி செய்ய வேண்டும். பாலியப் பருவத்தில் எண்ணமும் ஒழுக்கமும் நல்வழியில் ஒழுங்குபடச் செய்ய ஐயரின் கதைகளைப் படித்தல் நல்ல சாதனமாகும். இக்கதைகளைப் படித்துப் புத்தகத்தைக் கீழே வைக்கும் காலத்தில் ஒருவருடைய மனத்தில் பரிசுத்தமான உணர்ச்சிகளும் உன்னதமான எண்ணங்களும் ததும்பும்.

வீரம், காதல், சோகம், தேசபக்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஐயர் கட்டி எழுப்பிய கதைக் கோட்டைகள் தனிச் சிறப்புடையன. உள்ளத்தை உருக்கி உயர்ந்த கருத்துக்களை ஏற்றுவதில் ஒப்புயர்வு அற்றன். அவர் காட்டியதே கதைக்கு வழி.

இரண்டாவதாக, ஐயரைப் போலவே தேச பக்தியும் ஆட்சித் திறமையும் படைத்த சென்னை மாஜி மந்திரி சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி எழுதிய "ராஜாஜி குட்டிக் கதைகளை"ப் பார்த்திருக்கிறீர்களா? கதர், தீண்டாமை, குடியகற்றல் முதலிய காங்கிரஸ் சபையின் நிர்மாண வேலைத் திட்டங்களிருக்கின்றனவே. அவற்றை உலகிற் பரப்புவதற்கு இராஜாஜியின் குட்டிக் கதைகள் ஊதுகுழல் போன்றவை. சில இடங்களில் வ. வே. சு. ஐயரின் கதைகளை வாசிக்கும் பொழுது ஏற்படுவதுபோல ராஜாஜியின் கதைகளை வாசித்தாலும் கண்ணில் ஜலம் ஊறிவிடும்.

அத்தகைய உணர்ச்சியுடன் ஏழைகளுக்கு ஏற்படும் இக்கட்டுகளை ஆசிரியர் சிறந்த உள்ளத்துடன் விவரிக்கிறார். அப்பாடா! இந்த மனிதனுக்கு இந்திய சமுதாயத்திலும் தீண்டாதாரிலும் ஏழைமக்களிலும் உள்ள அன்பும் பக்தியுமதான் என்னவென்று நாம் அதிசயப்படுவதுடன் நமது கெட்ட சமூக வழக்கங்களைப் பற்றி என்றும் நினைத்துக்கொள்ளக் கூடியதாயுமிருக்கிறது. இக்கதைக்கொத்தில் வேலைக்காரன் என்ற கதை மொழிபெயர்ப்பானாலும் ஒரு சிறந்த கதையென்றே கூறவேண்டும்.

அடுத்ததாக தி. ஜ. ர. என்பவர் எழுதிய சந்தனக்காவடி முதலிய கதைகளைப் பார்த்திருக்கிறீர்களா? "சாகா வரம்பெற்ற அற்புதச் சித்துக்களைப்" பாடி நமது மாநகரங்களை நிர்மாணித்து விடுகிறோம் அதி விசித்திரக் கதைகளைக்கொண்டு அகிலம் மெச்சும் சாம்ராஜ்யமொன்றைச் சமைத்து விடுகிறோம் என்ற ஓர் ஆங்கிலக் கவியின் வாக்கியங்களை தி. ஜ. ர. அப்படியே நம்பிவிடுகிறார் போலிருக்கிறது.

இவருடைய கதைகளில் நமது பழக்கவழக்கங்கள் நிறைந்திருக்கின்றன. நமது நடையுடை பாவனைகள் நிரம்பியிருக்கின்றன. தேசிய மணம் கமழ்கின்றது. கலைச்சுவை ரசிக்கின்றது. ஆறுகளை, நீலக்கடல், மஞ்சள் வெய்யில், செவ்வானம், பசுஞ்சோலை, இளந்தென்றல், இவைகளுக்கே அடிக்கடி அவர் தொல்லை கொடுத்துக்கொண்டிருப்பதில்லை. இவருடைய சிறுகதையையும் த. நா. குமாரசுவாமி எழுதிய "கன்யா குமாரி" முதலிய கதைகளையும் ந. சிதம்பர சுப்பிரமணியம் எழுதிய "சக்கரவாகம்", கு. ப. இராஜகோபாலன் எழுதிய "கனகாம்பரம்", தி. ந. சுப்பிரமணியன் எழுதிய "தோட்டியை மணந்த "அரச குமாரி"", பி. எம். கண்ணன் எழுதிய "பவளமாலை", வி. எஸ். இராமகிருஷ்ணன் (வஸந்தன்) எழுதிய "வெண்தாமரை" ஆகிய இச்சிறுகதைத் தொகுதிகளையும் புரட்டி வாசித்துப் பார்த்தீர்களானால் சிறுகதை என்பது இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற வரையறையே இருப்பதாகத் தெரியமாட்டாது. விதம் விதமான ரூபத்தில் சிறுகதைகள் பிறந்திருக்கின்றன, பிறந்தும் வருகின்றன. சிலசமயம் ஒரு வியாசத்தின் தன்மையைக் கூடச் சிறுகதைகள் அடைந்து விடுகின்றன. நடைச்சித்திரமாகவும் நிகழ்ச்சி வர்ணனையாகவும், பாத்திர வர்ணனையாகவும், விசித்திரக் கற்பனையாகவும் பலவேறு ரூபம் பெற்ற சிறுகதைகளுமுண்டு.

இவற்றை விட "வ. ரா." எழுதிய நடைச்சித்திரத்தையும் எஸ். வி. வி. எழுதிய "வாழ்க்கையே வாழ்க்கை" என்ற இரு நூல்களையும் கொஞ்சம் நேரம் புரட்டிப்பார்த்தால் இச்சிறுகதை ரூபம் என்னென்ன விளைவைக் கொடுக்கிறதென்பதை அறிவீர்கள்.

இந்திய அரசாங்கத்துக்கு வேண்டுகோள்

இலங்கை இந்தியக் காங்கிரஸ் நிர்வாகசபைத் தீர்மானம்

நாவலப்பிட்டி, ஆக 16

இலங்கை இந்தியக் காங்கிரஸின் நிருவாகசபைக் கூட்டம் இம்மாதம் 15-ந்திகதி நாவலப்பிட்டியில் நடைபெற்றது. அப்பொழுது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது:-

"இந்நாட்டின் உணவு நிலைமை பற்றி இலங்கை இந்தியக் காங்கிரஸ் நிர்வாகசபையின் இக்கூட்டம் மிக்க கவலையோடு நோக்கும்போது இதுசம்பந்தமாக இப்பொழுது இந்தியாவுக்கு விஜயஞ் செய்திருக்கும் இலங்கை அரசாங்கத்தாரின் உள்நாட்டு மந்திரி ஸேர். டி. பி. ஜயதிலகாவுக்குச் சகல உதவிகளையும் அளிக்கும்படி இந்திய அரசாங்கத்தைக் கோருகிறது.

கட்டாக்கில் காங்கிரஸ் வெற்றி

கட்டாக், ஆக 9

ஒரிஸா சட்டசபைக்கு நடந்த உபதேர்தலில் காங்கிரஸ் அபேட்சகரான ஸ்ரீ மதனமோஹன் பட்டநாய்க் 6365 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

அவருடன் போட்டியிட்ட மற்ற கட்சியினர் இருவரும் தோல்வியடைந்தனர். அவர்களின் பிணையும் பறிமுதலாகிவிடும். வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகர் ஸ்ரீ பட்டநாய்க் வாக்குகள் கணக்கிட்டு முடியு முன்னரே இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி அவர் கைதுசெய்யப்பட்டார்.

தேகவியோகம்

S. R. முத்துக்குமாரு

குரும்பசிட்டியைச் சொந்தவூராகக் கொண்டவரும் மட்டக்களப்புக் கச்சேரியில் பிரதம லிகிதராகக் கடமையாற்றி இளைப்பாறியிருந்தவருமாகிய திரு. S R. முத்துக்குமாரு அவர்கள் இம்மாதம் 15-ந் திகதி தெல்லிப்பழை குரும்பசிட்டியிலுள்ள தமது இல்லத்தில் தேகவியோகமாயினர் என்னும் துக்கச் செய்தியை இங்குக் குறிப்பிட வேண்டியவர்களாயிருக்கிறோம். திரு. முத்துக்குமாரு அவர்கள் பிரசித்திபெற்ற ஒரு கலைஞான அறிஞர். இவர் தமிழ் மக்களின் பண்டை நாகரிகத்தைப் பற்றி ஆங்கில இந்துசாதனத்திற் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

இவரது ஈமக்கிரியைகள் அடுத்த நாள் வெகுஜன சமுகத்திற் சிறப்பாக நடைபெற்றன. அவரை இழந்து வருந்தும் குடும்பத்தார்க்கும் சுற்றமித்திரர்களுக்கும் எமது மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக.

தமிழ்நாட்டில் கிளம்பிய இந்தச் 'சிறுகதை ஆர்வம்' குறைந்த பாடில்லை. "கதைக்கொத்து" என்ற பெயருடன் இரண்டு பெரிய கதைத் தொகுதிகளை "அலயன்ஸ் கம்பெனியார்" பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்கள். இத்தொகுதிகளில் ஏறக்குறைய 90 எழுத்தாளர் வரை கதை எழுதியிருக்கின்றனர். அன்றியும் இது "சிறு கதையுகமோ" என்று ஐயுறும்படியாகப் பத்திரிகைகளும், ஆண்டுமலர்களும், வாரவெளியீடுகளும் எல்லாம் கதையின்றி வெளிவருவதில்லை.

இந்தக் கதைக்கடலில் நீந்தித் திளைக்க வேண்டுமானால் ஒரு சில நாளைப் பயணமல்ல. இவற்றில் பிரசாரத்தை நோக்கமாகக் கொண்டவை சில. சனரஞ்சகமான கலைச்சுவை நிரம்பியவை சில; விநோதார்த்தமாக எழுந்தவை சில. மேனாட்டுச் சிறுகதைகளைப் பின்பற்றி மொழிபெயர்ப்பாக ஆக்கப்பட்டவை பல. இவற்றை அனுபவிக்க வேண்டுமானால் மேலே கூறிய இந்த நூல்களை வாங்கி வாசிக்கலாம்.

தி. நா. சுப்பிரமணியன் எழுதிய கதைகள் சரித்திர சம்பந்தமானவை. ஒவ்வொரு கதையும் பாரத நாட்டுச்சரித்திரத்தின் ஏதோ ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே சித்திரிக்கப்பட்டன.

வாழ்வின் அம்சம் ஏதாவது ஒன்றையோ ஒரு உணர்ச்சி அல்லது சிந்தனை நிலையையோ அடிப்படையாகக்கொண்டு பளீரென்று வாழ்க்கைத்தத்துவத்தில் ஒரு பகுதியை ஒளிபரப்பி, மனத்திலே ஓயாத சிந்தனை அலைகளை எழுப்பும் கதைகள்தான் உண்மையான நல்ல சிறு கதைகள். நான்மேலே கூறிய கதைத்தொகுதிகளில் எல்லாம் இம்மாதிரியான சிறு கதைத் தத்துவத்தைக் காணலாம்.

கொக்குவில் மேற்கு
மஞ்சவனப்பதி முருகப்பெருமான்
தேர்த்திருவிழா
விஞ்ஞாபனம்

உலகந் தழைக்க வருவாழி வேல்கோன் டுலவுதமிழ்ப்
புலவன் முருகன் பதிகந் தமிழ்ற் பொலிவருளும்
இலகும் புலிநீச் செஞ்சடை யெந்தை யிளிநிலெழிற்
றலமும் புரந்திடு மைங்கரன் றன்றிடத் தாண்மலரே.

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகப்பெருமான் ஆலயத்தில் நிகழும் சித்திரபானு வருடம் ஆவணி மாதம் 9-ந் திகதி (25-8-42) செவ்வாய்க்கிழமை பகல் 1 மணியளவில் புதிதாக அமைக்கப் பெற்றிருக்கும் அதியற்புத அலங்காரமான இரதத்தில் ஷண்முகப் பெருமான் எழுந்தருளி அடியார்க்கு அருள்புரிந்து திருவீதி உலாவருங் காட்சியைச் சிவநேயச செல்வர்களனைவரும் தரிசனஞ்செய்து திருவருளைப் பெறும்படி வேண்டுகின்றோம்.

தருவார் நிறுறை மித்திரன் வேண்டிடத் தாரகனை
வெருவாத சிங்கனைச் சூரனைச் செற்றிட்ட வேற்குமரா
மருவா மலப்பகை மாற்றிடும் மஞ்ச வனத்துறையும்
முருகா நினதரு ளென்றனைக் காத்திட முன்னிற்குமே.

கொக்குவில் மேற்கு
12-8-42
இங்ஙனம்
ச. வே. சண்முகம்பிள்ளை

Mis. 101—20-8-42

யுத்தஞ் செய்யும் இலங்கை

இதைக் குறித்து ஒன்று சொல்ல விரும்புகிறேன். பயத்தினுல் அங்குமிங்கும் ஓடுவது வீண் வேலை. ஒரு துன்பம் வரும்பொழுது யாம் தைரியத்தோடு இருந்தால் அதை இலகுவில் தடுத்து விடலாம். ஆகையால், எமது தேசத்தைக் கைப்பற்ற சத்துரு வந்தால் அங்குமிங்கும் ஓடுவது அவனுக்குத் துணைபுரிவது போல் இருக்கும். ஆகையால் அவன் வந்தால் தைரியத்தோடு அவனை எதிர்க்க வேண்டும். ஓடக்கூடாது. சண்டைக்குப் புறமுதுகு கொடுத்தோடாது எதிர்த்து நின்று போர் புரிந்த வீரர்களின் வழித்தோன்றல்களல்லவா நீங்கள். ஓடாது உங்கள் நாட்டையும் உங்கள் முதாதையரின் மானத்தையும் காப்பாற்றுங்கள். எம்மை வளர்த்து அன்றி எமக்கு உண்டியும் உடையும் தந்து காப்பாற்றி வருவதல்லவா எமது நாடு! அதற்கு இன்னல் வரும்போது நாம் விட்டு விட்டு ஓடுவதா?

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்றார் நாயனார்.

ஆகையால் அதற்கு இன்னல் வந்தபொழுது நாம் ஓடினுல் எமது செய்ந்நன்றி எங்கே? ஓடவேண்டாம்! ஓடவேண்டாம்!! எங்கள் தலைவர்களையும் தேசவல்லரசுகள் படைவலியும் எங்களையும் எங்கள் நாட்டையும் காக்கும். இது நிச்சயம்.

மற்றும், ஒரு தேசத்தில் சண்டை நேர்ந்தால உணவுப் பொறுப்பு உண்டுபடுவது வழக்கம். எங்களுக்கும் அதுபோலவே ஒரு சிறிது வந்திருக்கின்றது. இதுகாறும் பிறநாட்டு நெல்லையும் அரிசியையும் நம்பியிருந்தோம். சண்டைக் குழப்பத்தால் கப்பற் போக்கு முன்போல் இல்லை. அரிசி, நெல் மாத்திரமல்ல, வேறு உணவுப் பொருட்களும் எமது நாட்டுக்கு வருவது குறைவு. அதனுல் வழக்கமான உணவு முன்போல அகப்படாது. ஆகையால் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றி இலகுவில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களைத் தின்னப் பழக வேண்டும். எமது நாட்டிலே தினை, சாமை, குரக்கன், சோளம், பலா, பனம்பண்டம் முதலியவை உண்டு. இவற்றை உண்பது மாத்திரமல்ல, இப்பொருட்களை இப்போது இருப்பதிலும் மும்மடங்கு அதிகம் விளைவிக்க வேண்டும். இவ்வண்ணம் செய்தால் சண்டைக் காலத்திலல்ல ஏனைய காலங்களிலும், உணவுக்குப் பிறநாடுகளை எதிர்பாராது இருந்து கொள்ளலாம்.

இவ்விடயத்தில் இங்கிலாந்தை நாம் முன்மாதிரியாக வைத்துக் கொள்ளல் வேண்டும். இதுகாறும் இங்கிலாந்திலுள்ளார் உணவுக்குப் பிறநாட்டை நம்பியிருந்தனர். ஆனல், சண்டை தொடங்கியபின் அங்கு வசிப்போருக்கு வேண்டிய உணவுப் பொருட்களைப் பெரும்பாலும் அங்கேயே விளைவிக்கின்றனர். அக்காரணத்தினுல் அவருக்கு உணவில்லாத திண்டாட்டம் இல்லை. போதியளவு உணவு இல்லாவிட்டால் ஒரு தேசம் சண்டை செய்வதெப்படி? பசிவந்திடப் பத்தும் பறந்துபோம் இவ்வுண்மையை நினைத்து போலும் ஆங்கிலநாட்டார் தமது சுதேசத்தில் தமது பெரும் முயற்சியால போதியளவு உணவுப்பொருளை உண்டாக்குகின்றனர். அதுபோலவே நாமும் ஆங்கிலநாட்டாரைப் பின்பற்ற வேண்டும். எமக்கு வேண்டிய உணவை நாம் எமது நாட்டில் உண்டு பண்ண விடாமுயற்சி செய்தல் வேண்டும். அப்படிச் செய்தால் உணவுப் பஞ்சம் வராது. அப்படியானல் வெற்றி நிச்சயம்.

கண்ணப்பன் கண்ட கண்ணுதற் பெருமான்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

'கருங்கதிர் விரிக்கு மேனிக் காட்டு
குழவி தானும்
இரும்புலிப் பறழி னேடும் பிறவுள
னவே யன்றி
வரும்பெரு வலக மெல்லா மனப்
பெரும் பெருமை காட்டி
தருங்குறி பலவும் சாற்றத் தன்மை
யிற் பொலிந்து தோன்ற'

அளப்பரும் உவகை யளாதிற் கொண்டான். அண்ணலைக் கையிலேந்தக் கருமையால் திண்ணன் என்று பெயரிட்டனன். திண்ணிய வேடர் உலகையால் ஆரவாரித்தனர்.

திண்ணனுரது தந்தை நாகனைப் பற்றிக் கூறுங்கால் 'வெஞ்சினமடங்கல் போல்வான்' எனவும் 'சூரரிப் பிணவு போல்வாள்' எனவும் முறையே உவமை கூறினர். வேட்டுவக் குடி வீரத்திற் சிறந்த குடி. ஆகவே அக்குடித் தலைவனுகிய நாகனை ஆண் சிங்கமெனக் கூறி மனைவி தத்தையைப் பெண் சிங்கமெனக் கூறியதும் பொருத்தமாவதே. இங்ஙனம் இவ்விருவரும் சிங்கம் போல்வார் என்று கூறியதற்கேற்ப கண்ணப்பரைச் சிங்கக் குட்டியாகக் கொண்டு 'செங்கண்வயக் கோளரியேறன்ன திண்மைத் திண்ணனுர்' என்றன மென்மையாழும் கானவர்க்கரிய சிங்கம் எனவும் கூறுவர் சேக்கிழார். நாகனும் தத்தையும் மகப்பேறின்றுகத் தமது குலதெய்வமாகிய முருகனை நோக்கித் தவஞ் செய்த பேற்றினுலேயே கண்ணப்பரைப் பெற்றுர். உலகில் ஞானம், கல்வி, பத்தி முதலியவற்றுல் சிறந்த பெரியார்களை ஆராயின் அவர்கள் யாவரும் தவங்கிடந்து பெற்ற தவக்குழந்தைகளென்பது பெறப்படும். மெய்கண்டதேவர், திருஞானசம்பந்தர் முதலியோர்கள் இதற்கையினர். திருஞானசம்பந்தரது பிறப்பினைக் கூறுங்கால்,

"மனையறத்தி லின்பமுறு மகப்
பெறுவான் விரும்புவா
ரனையநிலை தலைநின்றே யாடியசே
வடிக்கமல
நினைவுறமுன் பரசமய நிராகரித்து
நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்
போற்றுந் தவம் புரிந்தார்."

என்று தாய் தந்தையர் அருந்தவம் புரிந்ததாகச் சேக்கிழார் பெருமான் அருளுகின்ருர். இறைவனுடைய திருவருள் கனையப் பிறக்கும் மகவு அழுந்திய காதலே காரணமாய்ப் பிறக்கும். மகவிலும் ஞானம், தவம்முதலியவற்றினுற் சிறந்ததென்பது தெளியப்படும்.

"கானவர்குலம் விளக்கத் தத்தை
பாற் கருப்ப நீட
ஊனமில் பலிகள் போக்கி யுறுக
டன் வெறியாட்டோடு
மானவத் திங்கள் செல்ல வனவர்
செய் தவத்தினுலே
பான்மதி யுவரி யீன்ற தென மகப்
பயந்தபோது"

என்க்கூறியது ஈண்டு நோக்கத்தக்கது. பல குற்றங்களும் செறிந்த வேடர் குடியை உவர்க்கடலாகத் தவகெழுந்தாகிய கண்ணப்பரைப் பான்மதியாக உவமித்ததும் ஈண்டு பொருத்தமேயாகும். —வரும்.

பிரதானமான அறிவித்தல்

லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்றர். S. சாஸ் பத்திரானு

இப்போது கிறைண்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிருர்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவாத் தோட்டம், வரியப்பொலா, வடமேல்மாகாணம்.

Y115 18-8-42—17-11-42

விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

ஒரு கலம் ரூபா 10-00
கால் கலம் ரூபா 4-00
அரைக்கலம் ரூபா 5-50
ஒரு அங்குலம் ரூ. 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)

இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்

"புரேப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்

Y 19. 4-3-42—3-3-43

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறாது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா
25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிருேம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

தத்துவப் பிரகாசர் காலம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

இவற்றுல், தத்துவப்பிரகாசர், மெய்கண்டதேவாது சந்தான பரம்பரையில் வந்தவ ரென்பதும், சீர்காழிச் சிற்றம்பல நாடிகளுடைய மாணவ ரென்பதும் புலனுகின்றன.

"சிவசக்தி சனற்குமரன்
சிச்சத்ய ஞான
தெரிசிபரஞ்சோதி யொடு
மெய்கண்ட நாதன்
சுவமறையான் ஞானகுரு
உமாபதிமச் சுறைவான்
நற்சிற்றம் பலநாடி
பழுதை கட்டும் பந்தன்
சிவபுரத் தத்துவப்பிரகாசன்
திருவாரூரிற்
செட்டித்தெரு ஞானப்ர
காசன் பின்பல்லூர்ப்
பவமொழிக்குஞ் சிதம்பரநா
தன்ஞான ப்ரகாசன்
பயில் தருமைத் திருஞான
சம்பந்த னுகும்"

என்று தருமபுர ஆதீனபரம்பரை கூறும் ஒரு பாடலினுலே, உமாபதியாருக்குப்பின் ஆசாரிய பரம்பரையில் தலைமை வகித்தவர்கள் மச்சுறைவார், சிற்றம்பலநாடிகள், பழுதைகட்டும்பந்தர், தத்துவப்பிரகாசர், கமலை ஞானப்பிரகாசர், சிதம்பரநாதர், ஞானப்பிரகாசர், தருமையாதீன ஸ்தாபகராகிய குருஞான சம்பந்தர், என்பது தெரிகிறது. குருஞான சம்பந்தர் கமலை ஞானப் பிரகாசருக்குப்பின் மூன்ருவது முறையில் தலைமை பூண்டபோதிலும், தம்மை அவருடைய சீடரென்றே கூறிக் கொள்வார். அவ்வாறே தத்துவப் பிரகாசரும், சிற்றம்பலநாடிகட்குப் பின் இரண்டாம் முறையாகத் தலைமை பெற்றபோதிலும், தம்மைச் சிற்றம்பல நாடிகளின் சீடரென்றே கூறிக் கொள்வதை மேலே கண்டோம். எனவே, இவர் சிற்றம்பல நாடிகளின் நேர்மாணவரென்றே கொள்ளலாம்; இப்படிக் கொள்வதே மரபாகவும் இருந்து வருகிறது. (சிற்றம்பல நாடிகளுக்கும் செட்டித்தெரு ஞானப்பிரகாசருக்கு மிடையில் பின்னும் பல ஆசாரியர்களைச் சேர்த்துக் கூறுவது வழக்கம்.)

மச்சுறைவார் எனனும் அருணமச்சிவாயருடைய மாணுக்கர் காழிக் கங்கை மெய்கண்டார் என்றும் இவர் மாணுக்கரே சிற்றம்பல நாடிகள் என்றும் மற்றொரு வரலாறு கூறுகிறது; சிற்றம்பல நாடிகள் தம் நூல்களிற் கங்கை மெய்கண்டாரைத் துதிக்கிருர். எனவே, உமாபதியாருக்குப் பின்வந்த சிற்றம்பல நாடிகள் இந்த ஆசாரிய பரம்பரையில் மூன்ருந்தலை முறையினர், தலைமுறை யொன்றுக்கு உ௫ ஆண்டுகள் வீதம் கணக்கிட்டால், உமாபதியார் காலம் கி. பி. 1313 என மேலே கூறியதை நோக்கும்போது, சிற்றம்பலநாடிகள் காலம் ஏறக்குறைய 1390 ஐ ஒட்டியிருக்கலாம். சிற்றம்பல நாடிகள் சமாதியடைந்த காலத்திலே, அவர் மாணுக்கர்களைவரும் உடன் சமாதி யடைந்தனர் என்பது சரித்திரம். அங்ஙனமாயின், தத்துவப்பிரகாசர் காலமும் இதுவேயாகும். அன்றியும், இவர் மதுரைச் சிவப்பிரகாசருக்கு (அதாவது 1488 க்கு) [illegible] முந்தியவர் என மேலே கூறியதற்கும் இக்காலம் பொருத்தமாகும்.

இவற்றுல், தத்துவப்பிரகாசர் செய்த தத்துவப்பிரகாசர் காலம் 14-ஆம் நூற்ருண்டின் இறுதி என்று ஏற்படுகிறது.

தமிழ்நாவலர் சரிதையிலே தத்துவப்பிரகாசர் என்ற ஒருவருடைய சரிதக் குறிப்புகள் காணப்படுகின்றன. இவைகளிலிருந்து இப்பெரியார் 1509 முதல் 1530 வரை அரசாண்ட விஜய நகரத்தரசரான கிருஷ்ண தேவராயரால் பெரிதும் கௌரவிக்கப் பெற்று வாழ்ந்த ஒரு சிவஞானி யென்று விளங்குகிறது. காலஞ்சென்ற திரு. சோமசுந்தர தேசிகரவர்கள், இவ்வரலாறுகளை ஆராய்ந்து, தத்துவப்பிரகாசம் பாடிய தத்துவப்பிரகாசரும் கிருஷ்ண தேவராயரால் ஆதரிக்கப் பெற்ற தத்துவப்பிரகாசரும் ஒருவரே எனக் கொண்டு, அவர் காலம் 16-ம் நூற்ருண்டு என முடிவு கட்டினர்கள்.* ஆனல், மேற்சொன்னவற்றுல், தத்துவப்பிரகாசம் பாடிய தத்துவப்பிரகாசர் 14-ம் நூற்ருண்டில் வாழ்ந்தவர் என்பதும், தமிழ்நாவலர் சரிதையிற் குறிப்பிடப்படும் தத்துவப்பிரகாசர் அவரினும் வேருய் 16-ம் நூற்ருண்டில் வாழ்ந்தவ ரென்பதும் பெறப்படும்.

இனி, நூல் விருந்த தத்துவப்பிரகாசரேயன்றி, மற்ருெரு தத்துவப்பிரகாசரும் இருந்தாரென்று தெரியவருகிறது. கமலை ஞானப்பிரகாசர் 16-ம் நூற்ருண்டின் பிற்பாதியில் வாழ்ந்தார் என்பது திரு. தேசிகரவர்கள் முடிபு.† இப்பெரியாருடைய சீடர் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர். இவர் பாடியநூல் திருவொற்றியூர்ப்புராணம். சிவஞானசித்தியார் பரபக்கத்துக்கு இவர் ஒருரை செய்திருக்கிருர். இவ்வுரைக்குப் பின், தத்துவப்பிரகாசர் என்பார் அந்த பரபக்கத்துக்குப் 'பதவிருத்தி' செய்தார். இது,

"தத்துவய லொற்றியூர்
ஞானப்பிர காசனருட்
சித்தி படருரை யைச் செப்பிய
பின்—வித்தகமாத்
தத்துவப்பிர காசன் பதவிருத்தி
தான் செய்தான்
உத்தமர்சித் தமொருமை யாய்',

என்ற வெண்பாவால் தெரியவருகிறது. இவ்வுரை அச்சாகி இப்போது வழக்கிலுள்ளது; இதனுள், சௌத்திராந்திகன் மதமறுதலுக்கு உரை யெழுதவிடத்து, பிரபோத சந்திரோதயம், சித்தாந்தவசனம் முதலிய புத்த நூல்களிலிருந்து இவ்வாசிரியர் சிற்சில மேற்கோள்களைக் காட்டுகிருர். இவர் கமலை ஞானப்பிரகாசரின் மாணுக்கருக்குப் பின் வந்தவர். ஆகவே, இவர்காலம் 16-ம் நூற்ருண்டின் இறுதியா யிருத்தல் கூடும்.

இவற்றுல், தத்துவப்பிரகாசர் என்னும் பெயருடைய சைவப் பெரியார் மூவர் இருந்தனர் என்று விளங்குகிறது. முதலாமவர் தத்துவப்பிரகாசம் பாடியவர்; காலம், 14-ம் நூற்ருண்டின் இறுதி. இரண்டாமவர், தமிழ் நாவலர் சரிதையிற் சுட்டப்பட்டவர்; காலம், 16-ம் நூற்ருண்டின் முற்பாதி. மூன்ருமவர் சித்தி பரபக்கத்துக்கு உரை செய்தவர்; காலம் 16-ம் நூற்ருண்டின் இறுதி.

—செந்தமிழ்

---

* பதினுரும் நூற்ருண்டுத் தமிழ்ப் புலவர்கள் வரலாறு, பக்கம் 11-23.

†. பதினுரும் நூற்ருண்டுத் தமிழ்ப் புலவர்கள் வரலாறு, பக்கம் 122.

ஸ்ரீமத் உமாபதிசிவாசாரிய சுவாமிகள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

நிக்கண்ணேனுதிய சைவவாதி சுத்தசைவன். சுத்தசைவன் சொரூபலக்கணம் சித்தாந்த சைவத்தில் சிறிது வேறுபடக்கூறுதலின் வேறு வைத்தெண்ணப்பட்டான். அவனின் சுத்தசைவத்தைச் சித்தாந்தத்துளடக்கிப் பாடாணவாதி முதல் நிமித்த காரணவாதியீருகிய அறுவரும் அகச்சமயத்தவரெனக் கொள்க. நிமித்தகாரண பரிணுமவாதியெனினும் சிவாத்துவிதவாதியெனினும் ஒக்கும். இத்தகைச் சுவாமிகள் இந்நூலின் பாயிரத்தில

"பெருங்கடலுதவுங் கருங்கடுவாங்கிக்
கந்தரத்தமைத்த வந்தமில் கடவுள்
டாலரையுணர்த்து மேலவர்போலக்
கேட்போரனைவக் கோட்படுபொருளா
லருளியகலைக ளலகிலவாலவை
பல்பலசமயப் பான்மைத்தன்றே
யஃதாலவற்றுள் நன்மையுன்னிய
மாந்தர்துவே பொருளென்றதனில்
யறைதலின் வேற்றோர் பலுவலேற்றோ
இசையாமாறுபாடு கூறுவரதனுற் [ர்க்
புறச்சமயங்கள் சிறப்பிலவாகி
யருளின் மாந்தரை வெருளுறமயக்கி
யல்கைத்தேரி விலயிற்றீரு
மீங்கிலவ நிற்க நீங்காச்சமய
மூவிரு தகுதி மேவியதாமு
மொன்றேடொன்று சென் றுறுசீலவி
லாதுமாறு வீறுடைத்திலற்று
னெவ்வமில்லாச் சைவசற்சமயத்
தலகிலாகம நிலவுதலுளவலை
கனகமிரணியங் காஞ்சனமீழுந்
தனகிநியாடகந் தமனியமென்றிப்
பலபெயர் பயப்பதோர் பொருளேபோ
பதிபசுபாச விதிமுறை யிளக்கும் [லப்
வாய்ந்தநூலக ளாய்ந்தனராகி
யாசானுகி வீசியசமத்துட
னேழுஞ் சிருதா றெடுத்தவாயிரம்
வாழுநற்சகன மருவாகிற்பப்
பொற்பொது மலிந்த வற்புதஞனி
யாரும் விழவிற் பொற்றேரவையத்
தேருவெண்மர் நிரையிலிருப்ப
மயங்கு வாத மாயாவாதி [சேர்
முயங்கிடவொருதலைமுதுவெதிர் மணி
பெண்ணைசூழ்ந்தவெண்ணையம்பதிநிகழ்
மெய்கண்டவனருள் கைகண்டவர்களி
லொருவரொருதலை மருவியிருப்ப
வஞ்சபயிறவிக் கஞ்சிவந்தொருவ
னேதிலறபருளென வீதெனுராயா
வாதியைடயவினர் மறுதலைத்தருடர
மற்றவரயவின ரவருரைமறுத்துச்
சொற்றரவயவினரவருந் தொலைவுற்
நின்னேயெவரு முன்னே கழிபுழி
யாங்கயலிருந்த வருளினரழுந்து
நீங்கள் சங்கற்ப நிராகரித்தமையென
மற்றவருரைத்த சொற்றரு பொருள்
கொடு
வாதசொற்ப விதண் டையுமேதுவு
மோதுநால்வகை யுவமையுந்திகடர
வருள்சேர் மாந்தர் வெருள்சேராமற்
றர்க்கமும் விடையமுங்கறக
நற்கவிமாந்தர் நகைவிற்றுவனே"

என்னும் பாயிரத்தினுல் தெளிவாகக் காணக்கிடக்கின்றது.

முற்கூறிய சைவசித்தாந்த சாஸ்திரங்களெட்டும் சுவாமிகளாலே திருவாய் மலர்ந்தருளப்பட்டுச் சித்தாந்த நன்பொருள் பலவற்றைத் தவ்வேறிடங்களினும் விரித்து விளக்கிக்கூறிய நன்பொருளையுடைத்தாய மெய்கண்டசாத்திரங்களாகும்.

கோயிற்புராணம்

இது சிதம்பர மான்மியத்தைக் கூறுவது. கோயிலெனினும் சிதம்பரமெனினும் ஒக்கும். இதன்கண் வியாக்கிரபாதமுனிவர் பதஞ்சலி முனிவர் ஆனந்த தாண்டவதரிசனம்பெற்ற வண்ணமும் நந்தவனபுரீசமையானவராய பரமசிவனை சிறப்பையும் வளர்க அருணகூடம் தரிசிப்பித்தது வியக்கக் கொண்டமையும் மனு வேந்தன் மகனுகிய சிங்கவன்மனை சிவகங்கையில் மூழ்குவித்து இரணியவன்மனுக்கி முனிவரிருவருபதேசமும்பெறுவித்து தாண்டவங்கண்டு நடராஜருக்குத் திருக்கோயிலெடுத்து நித்திய நைமித்தியபூசை விழாசெய்தமையும் நடராஜர் திருவடித்தொழும்பாதற் பொருட்டு ஒரு குடைக்கீழாண்டு வீடுபெற்றமையும் எடுத்தோதும். இந்நூல் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியருளினுர் உமாபதி சிவாசாரிய சுவாமிகளாவர். இதனைக் கல்வியிற் றாகத நுண்பொருள்கள் மிகப் பொலிந்து விளங்கும் மாட்சிமை பலப்பல மிகுந்துள்ளன.

இதனுள் கற்பகவிநாயகர் துதி, பாயிரம், வியாக்கிரபாதச் சருக்கம், பதஞ்சலிச்சருக்கம், நடராஜச்சருக்கம், இரணியவன்மச் சருக்கம், திருவிழாச்சருக்கம் ஆறு சருக்கங்களுடைத்தாய் நூறு பாடல்களுடன் திருவிருத்தங்களைக் கொண்ட பெருமை வாய்ந்தது. இந்நூலிலுள்ள ஒவ்வோர் விருத்தங்களும் இன்பத்தமிழ் சுவையைப் பெற்றது. இதில் சுவாமிகள் தம்மனத்தை நோக்கிக்கூறிய திருவிருத்தம் வருமாறு.

"காதார் மார்தரு மனமே கமலமலர்
யல்லலி
சீதாமரையுமல்லாச் சிவனுமைமண் றுறி
ரனல்லன்
சீதாமரைருளுடைய நீலகலங் சே
வினிமன்றி
லாதார மாதுடனும் அண்டகடக்
கண்டலைபால்"

என திருவாய்மலர்ந்தருளிய திருவிருத்தத்தினுல் இருத்தருசனத்தின் பெருமை கூறியது காண்க. இவ்வாறே இந்நூலிலுள்ள ஒவ்வோர் கவிகளும் இன்பம் பயக்கும் பெருமை வாய்ந்தன. —வரும்

புதிய ரிக்ஷோ, கார்க் கட்டணங்கள்

குறைகளைப் பேசுக அதிகாரிகள் ஆலோசனை

வாடகைக் கார்களின் பிரயாணக் கட்டணங்களைத் திருத்தியமைக்க அவசிய மேற்பட்டிருப்பதாக உணரப்பட்டிருக்கிறது. எனவே, புதிய கட்டணங்களை விதிப்பதுபற்றி ஆலோசிக்கும் பொருட்டுக் குறித்த விஷயம் போக்குவரத்து ஆலோசனைச் சபையின் முன்னிலையில் சமர்ப்பிக்கப் படக்கூடும்.

பெற்ருேல் விநியோகக் கட்டுப்பாடு நடைக்கு வந்ததின் பயனுவும் போக்குவரத்து வாகனங்களை இறக்குமதி செய்ய அதிக செலவாகுமென்பதாலும் நகரிலுள்ள வாடகைக் கார்களும், ரிக்ஷோக்களும் மற்றும் வாகனங்களும் தத்தம் கட்டணங்களை உயர்த்தி விட்டன. சில வாகனங்கள் மிதமிஞ்சிய கட்டணங்களை விதிக்கின்றன. கட்டணப் பட்டியல்களை அநுஷ்டிக்காது அதிக கட்டணங்களை விதிப்பது பற்றியும் பொது மக்களுக் கேற்பட்டுள்ள வசதிக் குறைவு பற்றியும் பலர் பிரகாரமாக இராணுவ சேவையைச் சேர்ந்தவர்கள் முறையீடு செய்திருக்கின்றனர்.

குறித்த வசதிக் குறைவை முன்னிட்டுக் கூடியவரை பிரயாணத் தூரத்தைக் குறிக்கும் கருவியமைக்கப்பட்டுள்ள வாடகைக் கார் வில் அநேகர் பிரயாணஞ் செய்விரும்புவதுண்டு.

சகல வாகனங்களின் பிரயாணக் கட்டணங்களும் பல வருடங்களுக்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டு இதுவரை திருத்தி யமைக்கப்படவில்லை. இப்போதைய போக்குவரத்துக் கஷ்டங்களாலும், யுத்தநிலைக் காரணமாக ஏற்பட்டுள்ள மாறுதல்களை உத்தேசித்தும், பிரயாணக் கட்டணங்கள், குறிப்பாக வாடகைக் கார்களின் கட்டணங்கள் திருத்தியமைக்கப்படல் வேண்டும்.

தேங்காய்ப் பிண்ணுக்கின் கட்டுப்பாட்டு விலை

ருத்தல் ஒன்றுக்கு 2 சதம்

தேங்காய்ப் பிண்ணுக்கின் விலையும் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியால் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் விலை அந்தர் 2 ரூபாவாகவும் ருத்தல் இரண்டு சதமாகவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இறக்குமதியாகும் கால்நடை உணவுப் பொருள்களின் விலைகள் ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. உள்நாட்டுத் தேங்காய்ப் பிண்ணுக்கின் விலையும் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் பாற்பண்ணைக்காரர்கள் முதலியவர்களுக்கு மிக்க சௌகரியம் ஏற்படும். சென்றசில மாசங்களாகப் பிண்ணுக்கு தக்க விலைக்குக் கிடைக்காமல் இவர்கள் மிகவும் கஷ்டப்பட நேரிட்டது.

நெற்காணி விற்பனைக்கு

43 பரப்பு அரியாலையில் காசிப்பிள்ளையின் கட்டிக்கருகிலும் 40 பரப்பு கோப்பாயிலும் இருக்கிறது. வேண்டியவர்கள் வி. தாமோதரம்பிள்ளை சாவகச்சேரிக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

8—8—42

Mis 99—13.8—12.9.42

சென்ற விமானத் தாக்குதலின் பின்னர், அநேக ரிக்ஷோக்காரர்கள் இந்தியாவுக்குச் சென்று விட்டமையாலும் இப்பொழுது திரும்பிவர விரும்பியவர்கள் [illegible] குடியேறற் கட்டுப் பாட்டுச் சட்டத்தின் காரணமாகத் திரும்பிவர முடியாமையாலும், மற்றுங் காரணங்களாலும் ரிக்ஷோக் கட்டணங்களும் நூற்றுக்கு 50 வீதத்திற்கு அதிகமாக அதிகரிக்கப் பட்டுவிட்டன.

இருமல், இளைப்பு

சுகமானவர் மதிப்புரை.

கொழும்பில் 112, 2ம் குறுக்குத்தெருவில் ஓர் பிரபல ஜவுளிவர்த்தகர் சொல்லும் செய்தி:—

ஸ்ரீ. M. S. மரைக்காயர்

"ஆஸ்துமா" என்னும் இருமல், இளைப்பு, சுவாசகாச நோயால் நான் இரண்டுவருஷகாலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன்.

தண்டபாணி வைத்திய சாலையில்

தாளகபஸ்பமும் சித்திரமூலச் சூரணமும் ரூ. 12-50க்கு வாங்கி 25நாள் சாப்பிட்டேன். நோயின் கஷ்டங்கள் நீங்கிச் சுகமடைந்தேன்.

பின்பு இதுவரை 2வருடங்களாகியும் எனக்கு நோய் திரும்ப வரவில்லை. திடகாத்திரமாக இருக்கிறேன். என்னைப் பார்த்துவிட்டுச் சுமார் 100 பேர்கள் வரை தங்களிடம் மருந்து சாப்பிட்டுச் சுகமடைந்திருக்கிருர்கள். தங்களுக்கு என்றும் மறவாத நன்றி செலுத்துகிறேன். 19-10.40.

(ஒப்பம்) E. A. M. S. மரைக்காயர்.

இருமல், இளைப்பு, காசம், க்ஷயம், பீனிசம், தமேல் நோய்களுக்கு
25 நாள் தாளக பஸ்பம் } ரூ. 12-50
,, சித்திர மூலச் சூரணம் }

நோய் விவரம் எழுதவும். கேட்டால் இனும்

தண்டபாணி வைத்தியசாலை,
பழனி (PALNI. S. India)

(Q. 59. 18-6-42—17-9-42) (வி)

பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

நாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்

சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச் சிறிது உயர்த்தியுள்ளார்:-

இந்துசாதனம் தமிழ்ப்பிரதி	வருடமொன்றிற்கு	பட்டின எல்லையுள்	6.50
,, ஆங்கிலப்பிரதி	,,	,,	6.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	10.50
தமிழ்ப்பிரதி	,,	பிறவூர்கட்கு	9.50
ஆங்கிலப்பிரதி	,,	,,	9.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	13.50

தனிப்பிரதி 7 சதம்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 20th August, 1942.